S. Nadarajah, Publisher

பக்கங்கள் 4

விலை சதம் 5

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
104 A தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

புதுதகவு 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி 12வ புதன்கிழமை | Colombo, October, 29 1947 | ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 14 | இதழ் 118

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள் பால் உணவுகள், டின் ஆகாரவகைகள் இங்கிலிஷ் பீ கெடுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

இந்தியா பார்லிமெண்ட் மண்டபத்தில் ஆசியா தொழிலாளர் பார்லிமெண்ட்

20 ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் விஜயம்

இந்தியா தொழில் மந்திரி ஜகஜீவன்ராம் தலைவர்

ஆசிய மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த பண்டித நேரு வேண்டுகோள்

புதுடில்லி, அக். 27

இன்று புதுடில்லியில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஆசியா பகுதி தொழிலாளர் மகாநாடு ஆரம்பமாயிற்று. 20 ஆசிய நாடுகளிலிருந்து 250 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இந்தியா பார்லிமெண்ட் மண்டபத்தில் நடைபெற்ற ஆசியா தொழிலாளர் பார்லிமெண்ட் எனப்படும் ஆசியா தொழிலாளர் மகாநாட்டின் பிரதிநிதிகளை இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு வரவேற்றுப் பேசினார்.

மகாநாட்டுக் கூட்ட ஆரம்பத்தில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன நிர்வாக சபைத் தலைவரான ஸர் இவான்ஸ் தலைமை வகித்துப் பேசியபோது, "கிழக்குலகத்தின் அனுபவம், ஞானம், கலாச்சாரமே இப்பொழுது உலகுக்குத் தேவையாக இருக்கிறது. கிழக்குலகம் மேற்குலகும் ஒன்றுபடுமபடியான நிலைமையை மற்றெந்த உலக ஸ்தாபனங்களையும்விட சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமே உண்டுபண்ணியிருக்கிறது" என்று தெரிவித்தார்.

அதன்பிறகு இந்திய சர்க்கார் தொழில் மந்திரியான திரு ஜகஜீவன்ராம் மகாநாட்டுக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பின்னர் மகாநாடு கோஷ்டி கோஷ்டியாகப் பிரிந்து விவாதங்கள் நடத்தின. இன்று மீண்டும் மகாநாடு கூடி உப தலைவரைத் தெரிந்தெடுத்து பொறுப்புக் கமிட்டியொன்றை நியமிக்கும்.

ஜவஹர் வரவேற்புரை

பண்டித நேரு பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

ஆசிய நாடுகளில் மக்கள் வாழ்க்கைத்தரம் மிகத் தாழ்வான நிலையிலிருப்பதால் அதை உயர்த்தவேண்டியது முக்கியமான வேலையாகும். இந்தியா, சைனா, இந்தோனேஷியாவைப் போல அதிகமான ஜனத் தொகையுடைய நாடுகள் வேறு எங்குமில்லை பலவிதமான காரணங்களை முன்னிட்டு இங்குள்ள மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தியாவில் ஏராளமான ஜனங்கள் நிலச்சாகுபடியையே நம்பியிருப்பதாலும் கைத்தொழில்களில் ஈடுபட வசதியில்லாதபடியாலுமே மக்களிடையே தரித்திரம் அதிகரித்துள்ளது. பழங்காலத்திய ஜீன்தாரி முறைகளை ஒழித்து வட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதேபோன்று மக்கள் பொருளாதார சுபீட்சத்திற்கு மற்றும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். இந்திய சமஸ்தானங்கள் உட்பட இந்தியா முழுவதற்கும் ஒரே ரீதியாகவுள்ள தொழிலாளர் சட்டங்கள் ஏற்படுத்தப்படும். மக்கள் சுபீட்சத்திற்கு இந்த மகாநாடு தீர்மானிக்கும் நடவடிக்கைகளை இந்தியா ஆதரிக்கும்.

இலங்கையில் நடைபெற்ற மகாநாடு

ஆசிய தொழிலாளர் மகாநாடொன்று 1934-ம் வருஷம் மே மாதம் 10, 11 தேதிகளில் கொழும்பில் நடைபெற்றது. இந்தியா, இலங்கை, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ஸ்ரீமான்கள் என். எம் ஜோஷி, யமுனாதாஸ் மேத்தா, எஸ் வி. ஜோஷி ஆகியவர்கள் இந்தியாவின் பிரதிநிதிகளாக சென்றிருந்தனர். சர்வதேச ஸ்தாபனத்தின் இந்திய கிளையின் டைரக்டர் டாக்டர். பி பி பிள்ளையும், ஜினிவாவிலிருந்துவந்த சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் எப் ஐ ஜபுஸாவும் மகாநாட்டில் கலந்து கொண்டனர். இம் மகாநாட்டில் ஸ்தாபனத்தின் அமைப்பு விதிகள் தயாரிக்கப்பட்டு தொழிலாளர் பிரச்னைகள் சம்பந்தப்பட்ட அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சிற்றுண்டிச்சாலையில் சோதனை

கொழும்பு, அக். 28

சமைத்த உணவு விலைக்கு விற்கப்படுவதாகக் கிடைத்த தகவலின் மேல் ஒரு விலைக்கட்டுப்பாடு இன்ஸ்பெக்டரும் போலீஸாரும் பம்பலப்பிட்டியிலுள்ள ஒரு சிற்றுண்டிச் சாலையை சோதனையிட்டனர் என்று கூறப்படுகிறது.

திரு. பண்டாரநாயகா யாழ்ப்பாண விஜயம்

கொழும்பு, அக். 29

சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எஸ். டபுள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அக்டோபர் 31-ம் தேதி கொழும்பிலிருந்து புறப்பட்டு நவம்பர் 1-ம 2-ம் தேதிகளில் யாழ்ப்பாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

நவம்பர் முதலாம் தேதி காலை 9 மணிக்கு அவர் கரையூர் சேரிகளுக்கு விஜயம் செய்து சேரி ஒழிப்புத் திட்டத்தைப் பரிசோதனை செய்வார்.

பிறபகல் 3 மணிக்கு காங்கேசன்துறை க்ஷயரோக, பொது ஆஸ்பத்திரிகளைப் பார்வையிட்டபின் 4 30 மணி தொடக்கம் காங்கேசன் துறை 'ரெஸ்ட் ஹவுஸில்' தங்கி இருந்து காங்கேசன் துறை பொது ஆஸ்பத்திரியைச் க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்கும் பிரச்னை பற்றி வருகை தூதுக் கோஷ்டிகளை அவர்களது அபிப்பிராய சம்பந்தமாக விசாரிப்பார்.

நவம்பர் இரண்டாம் தேதி முக்கிய நிகழ்ச்சி காலை 9 30 மணிக்கு நடைபெறும் கிராமச் சங்க மகாநாடாகும்.

பின்னேரம் 2-30 மணிக்கு மந்திரி அவர்கள் மூளாய்க் கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து விட்டு மாலை 5-55க்கு கொழும்புக்குப் புறப்படுவார்.

திரு பண்டாரநாயகாவுடன் சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி திரு ஈ. டபுள்யூ. கன்னங்கரா எம். ஸி. எஸ். ஸோம செல்வார்.

ராஜாஜி, கவர்னர் ஜெனரல் ஆகிறார்

அடுத்த மாதம் தற்காலிக பதவி ஏற்பு

புதுடில்லி, அக். 28

மேற்கு வங்காள கவர்னராக இருக்கும் திரு. ச. ராஜகோபாலாச்சாரியார், கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்கும்படி அழைக்கப் பட்டிருக்கிறார். அடுத்த மாதம் இளவரசி கலியாணத்திற்கு லார்டு மவுண்ட் பேட்டன் இங்கிலாந்துக்கு ரஜாவில் செல்லும்போது அவருக்குப் பதிலாக தற்காலிகமாக கவர்னர் ஜெனரல்பதவி வகிக்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்.

டாக்டர் பி. சி. ராய்

லண்டன், அக 27

ஐக்கிய மாகாண கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் பி. சி. ராய் மூன்று மாத காலமாக அமெரிக்காவிலுள்ள ராணுவ ஸ்தலங்களையும், வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு இன்று லண்டனுக்கு வந்திறங்கினார் அமெரிக்க கலாசாரிகளுக்கு இந்திய மாணவர்களைப் பயிற்சிக்கு அனுப்புவதற்கான ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார். இந்திய ராணுவத்திலுள்ள வைத்தியப் படையை நவீன முறையிலமைக்கவே தானும் தனது மெய்ப்பாதுகாவலரான கர்னல் சென்னும் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்ததாக டாக்டர் ராய் கூறினார். அவர் இங்கு சில தினங்கள் தங்கியிருந்து பிறகு இந்தியாவுக்குப் பயணமாவார்.

நியூயார்க்கில் ஸர் பி. என். ராவ்

நியூயார்க், அக். 27

இந்திய அரசியல் திட்டத்தில் அமைக்கக்கூடிய சில அம்சங்களை அமெரிக்க அரசியல் திட்டத்திலிருந்து சேர்ப்பதுகுறித்து நேரடியான ஆராய்ச்சி செய்வதற்காக இந்திய சர்க்கார் அரசியல் திட்ட ஆலோசகரான ஸர் பி. என். ராவ் இன்று பம்பாயிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார். அமெரிக்க உரிமை மசோதாவிலுள்ள பல அம்சங்கள் இந்திய அரசியல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அவை நடை முறையில் எவ்வித பலனளித்து வருகிறதென்பதை நேரில் தெரிந்து கொள்ளவே தான் அமெரிக்கா வந்திருப்பதாகவும் அமெரிக்க, அயர்லாந்து அரசியல் திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு இந்திய அரசியல் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி முறையும் பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையும் இந்திய அரசியல் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அச்சுவேலியில் அதிசயப் பிறவி

மனித—மிருக அம்சங்களுடன் கூடிய குழந்தை

(நமது சொந்த நிருபர்)

அச்சுவேலி, அக். 26

அச்சுவேலி கிராம ஆஸ்பத்திரியில் வசாவளான் பகுதியைச் சேர்ந்த ஓர் பெண் இன்று மாலை நூதனமான ஓர் சிசுவைப் பிரசவித்துள்ளாள்.

இக்குழந்தை மனிதன், மிருகம் ஆகிய இரண்டினதும் அம்சங்கள் சேர்ந்த ஓர் அதிசயப் பிறவியாகவே காணப்படுகிறது.

இக்குழந்தையின் கால்களும் கைகளும் சுருண்டு சிறுவிரல்கள் போன்றதாயும் கண், காது, மூக்கு என்பன சப்பட்டையாய் தோலுடன் ஒட்டப்பட்டும் காணப்படுகின்றன. உடம்பு எங்கணும் வரிகள் காணப்படுகின்றன. உச்சியில் ஓர் நீண்ட பிளவு காணப்படுகிறது. முகம் கொஞ்சம் நீண்டும் வாய்ப்பகுதி பார்ப்பதற்குப் பயங்கர தோற்றம் உடையதாயும் காணப்படுகிறது. பற்கள்போன்ற ஓர் சவ்வுவாயின இரு மருங்கிலும் வளர்ந்திருக்கிறது.

இவ்வதிசயப் பிறவி உயிருடன் இருக்கிறது. அது கண்ணாடிப் பெட்டியில் பாதுகாப்பாய் வைக்கப்பட்டு மேற்படி ஆஸ்பத்திரியில் பார்வைக்குவைக்கப் பட்டுள்ளது.

இரு தேர்தல் ஆட்சேபனை மனுக்கள்

ஜாமீன் பணம் கட்டாததால் தள்ளுபடி

கொழும்பு அக் 28

இன்று பிரதம நீதிபதி இரு தேர்தல் ஆட்சேபனை மனுக்களை தள்ளுபடி செய்தார். மத்துரட்ட, கம்பளை பிரதிநிதிகளின் தேர்தல்களை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன மனுச் செய்தவர்கள் ஜாமீன் பணம் கட்டாத படியால் அம்மனுக்கள் இன்று தள்ளுபடி செய்யப்பட்டன

"கிறிஸ்தவத் திருச் சபைகள் ஒன்றுபட வேண்டும்"

யாழ்ப்பாண அத்தியட்சகர் பேச்சு

யாழ்ப்பாணம், அக். 28

"இலங்கையில் உள்ள எல்லா கிறிஸ்தவ ஆலயங்களும் ஒன்றுபடவேண்டும். அதை ஒத்திப்போடக் கூடாது என்பதே எனது திடமான முடிவு."

தென் இந்திய திருச் சபையின் யாழ்ப்பாணப்பகுதி அத்தியட்ச சபையாரின் முதலாவது கூட்டத்தில் அதி சங்கைக்குரிய எஸ குலேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் இக்கூட்டம் வட்டுக்கோட்டையில் சென்ற சனிக்கிழமை காலை நடைபெற்றது

பிரார்த்தனை நடைபெற்றபின் அதி சங்கைக்குரிய குலேந்திரன் பேசும்போது ஆரம்ப கிறிஸ்தவ மதம் நாளடைவில் பல பல கூறுகளாகப் பிரிந்து சென்றதென்றும் இப்போது மீண்டும் அக் கூறுகள் ஒன்று சேர்ந்து வருகின்றதென்றும் குறிப்பிட்டார் "ஆனால் அதே சமயத்தில் இலங்கையின் பல திருச் சபைகளும் துண்டுபடுக கிடக்கின்றன அவற்றைச் சீக்கிரமே ஒன்று சேர்க்க வேண்டும் என்பது என் முடிவு" என்று அவர் விளக்கினார்

பின்னால் தேர்தல்கள் நடைபெற்றபோது அதி சங்கைக்குரிய குலேந்திரன் தலைவராகவும், சங்கை பி ஸி டி. மேதர் காரியதரிசியாகவும் திரு பி. டபிள்யூ. அரியரத்தினம் பொக்கிஷதாராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

நிர்வாகக் கமிட்டியும், தென் இந்திய திருச் சபையின் "சினட்" பிரதிநிதிகளும் பின்னர் தெரியப்பட்டனர் [ந-நி]

பிரதமருக்கு வரவேற்பு

மட்டக்களப்பு, அக் 28

மட்டக்களப்பு அர்பன் சபைத் தலைவர் திரு. கே. வி. எம் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறற பொதுக் கூட்டமொன்றில் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்கவுக்கு அவரது மந்திரிசபையினருக்கும் வரவேற்பளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிங்கக் கொடியே தேசியக் கொடி!

இந்திய முறையை பின்பற்ற வேண்டுமென்பது அடிமைப் புத்தி

போக்குவரத்து மந்திரியின் கூற்று

தொடங்கஸ்லாந்தை, அக். 27

தொடங்கஸ்லாந்தையில் நடந்த ஒரு வரவேற்புக் கூட்டத்தில் போக்குவரத்து மந்திரியாகிய கோனல் ஜே எல். கொத்தலாவல பேசியபோது, சிங்கக்கொடியல்லாது வேறு எந்தக் கொடியும் தேசியக் கொடியாக அமைக்கப்பட்டால் மன எழுச்சியைக் கொடுக்க மாட்டாது எனக் கூறினார்.

தொடர்ந்து திரு கொத்தலாவல கூறியதாவது:- சிலர் அடிமைப் புத்தியுடன் இந்திய முறையைத் தேசியக் கொடி விஷயத்தில் கையாளுமாறு கேடகின்றார்கள். இது மன எழுச்சியைக் கொடுக்க மாட்டாது. அதுவுமல்லாமல் "யூனியன் ஜாக்" கொடி இருந்த இடத்தில் ஒரு கலப்பு ஜாதி இந்துஸ்தான் கொடியை வைப்பதுமாகும். மேலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் பதிலாக இந்திய மயத்தை ஏற்றதுமாகும்.

"சிங்கக் கொடியே இலங்கையின் ஆதிக் கொடியாகையால இதுகுள்ள சகல ஜாதியினரும் அதை ஏற்கத்தான செய்வார்கள்." என்று கூறி முடித்தார் திரு. கொத்தலாவல.

காஷ்மீரம் இந்திய யூனியனில் சேர்ந்தது

படையெடுத்து வந்த மலைஜாதியினர் விரட்டப்பட்டனர்

"காஷ்மீர் சிங்கம்" ஷேக் முகம்மது அப்துல்லாவின் கர்ஜனை

புதுடில்லி அக் 28

காஷ்மீர் சமஸ்தானம் இந்திய யூனியனில் சேர்ந்துவிட்டது இது சம்பந்தமாக இந்திய கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டனுக்கும் காஷ்மீர் மகாராஜாவுக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்து நேற்று பிரசாரம் செய்யப்பட்டது. ஆயுதந் தாங்கி படையெடுத்துவந்த மலை ஜாதியினரை காஷ்மீர் துருப்புகள் விரட்டியடித்ததும இக்கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டன

நேற்று இங்கிருந்து பறந்து சென்ற இந்திய துருப்புகள் ஸ்ரீநகரில் போய் இறங்கியதும் அங்கிருந்து மேற்கே 25 மைல் தூரத்திலுள்ள பாரமூலா என்னுமிடத்திற்கு நேரே படையெடுத்து வந்திருந்த மலை ஜாதியாருடன் போராடினர். இருதரப்பிலும் சேதமேற்பட்டது.

இதற்கு முன் காஷ்மீர் சமஸ்தானம் படையெடுப்பைக் தடுக்க இந்தியாவின் உதவியைக் கோரியது காஷ்மீர் சிங்கம் என்ப்படுபவரும் காஷ்மீர் தேசிய மகாநாட்டுத் தலைவருமான ஷேக் முஹம்மது அப்துல்லா இங்கிருந்து பயணமாகும்போது, "காஷ்மீருக்குள் படையெடுப்பவரைத் துரத்தியடிக்க ஜனங்களுக்கு உதவியாக நான் காஷ்மீருக்குத் திரும்புகிறேன் பாக்கிஸ்தானில் சேர நிர்ப்பந்தத்தை உண்டுபண்ணவே இப்படையெடுப்பு நடைபெறுகிறது" என்று தெரிவித்தார்

காஷ்மீர் மகாராஜா உடனே இடைக்கால சர்க்கார் நியமிக்கிறார். தனது பிரதம மந்திரியான பொறுப்பேற்று காஷ்மீர் நிர்வாகத்தை நடத்தும்படி மகாராஜா ஹரிசிங் ஜனத்தலைவர் ஷேக் முஹம்மது அப்துல்லாவைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

போட்டி சர்க்கார்

கராச்சி, அக் 27

காஷ்மீரிலுள்ள பூஞ்ச் ஜில்லா புலந்தாரி என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ள போட்டி சர்க்கார் விடுத்துள்ள அறிக்கை இங்கு கிடைத்திருக்கிறது. புலந்தாரி என்னுமிடம் மேற்கு பஞ்சாப்பிலுள்ள ராவல்பிண்டியிலிருந்து 40 மைல் தூரத்திலிருக்கிறது. எதிரிகளை முறியடித்து போட்டி சர்க்கார் துருப்புகள் பல இடங்களைக் கைப்பற்றியதாக அந்த அறிக்கை கூறுகிறது.

பாக்கிஸதான் உணவு மந்திரி எச்சரிக்கை

புதுடில்லி, அக். 27

காஷ்மீரில் முஸ்லிம்கள் கொல்லப்படுவதை உடனே நிறுத்தும்படி பாக்கிஸதான் உணவு மந்திரி கன்னுபர் அலி கான் காஷ்மீர் மகாராஜாவுக்கு எச்சரிக்கை அனுப்பியிருக்கிறார். மேற்குப் பஞ்சாப்பில் முஸலிம்களிடையே, ஆத்திரமேற்பட்டிருப்பதால், அங்கு நிலைமையை சமாளிக்க முடியாது போய்விடுமென்றும் தெரிவித்திருக்கிறார்

டோக்ரா துருப்புகளின் அட்டூழியத்தால் காஷ்மீரிலிருந்து 5000 முஸலிம்கள் பாக்கிஸ்தானுக்கு ஓடி வந்ததாக மேற்கு பஞ்சாப் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

ஹைதராபாத் சமஸ்தான நிலைமை

ஹைதராபாத், அக் 27

இந்திய சர்க்காருடன் சமரசப் பேச்சைத் தொடர்ந்து நடத்த ஹைதராபாத் தூதுக் கோஷ்டி புதுடில்லிக்குப் புறப்படும் சமயம் 30 ஆயிரம் முஸலிம்கள் ஒன்றுகூடிய கூட்டம் பிரதம மந்திரி நவாப் சத்தாரி மளிகைமுன் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் ஹைதராபாத் தனி நாடாக இருக்க வேண்டுமென்று கோஷித்தார்கள். மாளிகைக்குள் ஜனங்கள் நுழைவதாகப் பொலிஸார் தடுத்தனர் அதன் பிறகு நிஜாமின் அரண்மனைக்கு பிரதம மந்திரி செல்ல அனுமதித்தார்கள் இதன் பயனாக தூதுக் கோஷ்டி பயணம் ரத்துசெய்யப்பட்டது.

ஹைதராபாத் முஸலிம் கட்சியினர் ஹைதராபாத் இந்தியூனியனில் சேர்ந்தால் நேரடி நடவடிக்கை எடுப்பதாக பயமுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

காபூலில் ஜனாப் ஜின்னா தூதர்

புதுடில்லி, அக் 27

ஜனாப் ஜின்னாவின் தூதராக காபூலுக்குச் சென்றிருந்த வாப சாதா சாதுல்லா கான், ஆப்கன் மன்னரைச் சந்தித்துப் பேசிவிட்டு இன்று இங்கு திரும்பினார்.

காஷ்மீர் பற்றி மகாத்மா

புதுடில்லி அக் 26

இன்றைய பிரார்த்தனைப் பிரசங்கத்தில் காஷ்மீரைப் பற்றி காந்திஜி பிரஸ்தாபித்து பேசியதாவது:-

காஷ்மீரில் நடக்கும் சம்பவங்கள் எனக்குத்தெரியுமா என்று நீங்கள் கேட்கலாம். பத்திரிகைகள் கூறும் செய்திகள் உண்மையாக இருந்தால் காஷ்மீரில் நடக்கும் சம்பவங்கள் நிச்சயமாக மோசமானதுதான். பாக்கிஸ்தானில் சேரவேண்டுமென்று காஷ்மீரை பாக்கிஸ்தான் சர்க்கார் பலவந்தப் படுத்துவதாக புகார் கூறப்படுகிறது. காஷ்மீரையோ அல்லது ஹைதராபாத்தையோ அல்லது குட்டி சமஸ்தானமான ஜூனாகத்தையோ அல்லது வேறு எந்த சமஸ்தானத்தையோ இந்த டொமினியனில்தான் சேர வேண்டும் என்று யாரும் கட்டாயப்படுத்த முடியாது. இதற்கு என்னதான் பரிகாரமென்று நீங்கள் கேட்கலாம். தங்கள் சமஸ்தானங்களின் உண்மையான மன்னர்கள் மக்கள் தான் என்று நான் மன்னர்களிடமும் மகாராஜாக்களிடமும் பணிவாகக் கூறினேன். தற்போதுள்ள மன்னர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபதியத்தின் சிருஷ்டிதேவ. பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறிவிட்டதால் எல்லாசமஸ்தானங்களின் உண்மையான மன்னர்கள் அந்த சமஸ்தானங்களில் மக்கள் தான். மக்களின் விருப்பம் தான் மேலோங்கி நிற்க வேண்டும். ராஜாக்களும் மகாராஜாக்களும் டிரஸ்டிகளாக இருப்பார்கள். எந்த டொமினியனில் தாங்கள் சேரவேண்டுமென்பதை மற்றவர்களின் கட்டாயமில்லாமல் காஷ்மீர் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 ஏ, தட்டாந் தெரு, கொழும்பு.
போன: 3411.

சர்வதிந்த ஞ ஐப்பசி மீ 12உ
புதன்கிழமை

திரு. கொத்தலாவல கூற்று!

தேசியக் கொடி விஷயத்தில் மந்திரி சபையினரின் உண்மையான சுய ரூபம் மெல்ல மெல்ல தலைகாட்டத் தொடங்கி விட்டது. முதலாவது திரு. குணசிங்கா சிங்கக் கொடியல்லாது வேறு கொடி உயர்த்தப் பட்டால் தனது பட்டாளங் கொண்டு பிடுங்கி எறிவேன் என்றார். நேற்று போக்கு வரத்து மந்திரியாகிய திரு. கொத்தலாவல, சிங்கக்கொடியல்லாது வேறு எந்தக் கொடியும் மன எழுச்சியைக் கொடுக்கமாட்டாது என்று தொடங்கலாந்தையில் கூறியுள்ளார். திரு குணசிங்கா வாழைத்தோட்டத்தில் பட்டாளங்களை அணிவகுத்திருந்த காலங்கள் எமக்குத் தெரியும். ஆனால் இப்பொழுதும் அப்பட்டாளங்கள் அவருக்குத் துணையாக இருக்கின்றதோ என்பது சந்தேகந்தான்! என்றாலும் பழைய தேவடியாள் வயது சென்றால் கலையாவது ஆட்டத்தான் செய்வாள். தொழில் மந்திரியின் காரியதரிசியாக இருப்பதால் திரு குணசிங்கா பட்டாளங்களை அணிவகுக்க முடியும் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அப்பட்டாளங்களுக்கு ஒரு வேளை மன எழுச்சியிலாது திருந்து விடக்கூடும். இதற்கு வெளிக்கிளம்பியிருக்கிறார் திரு கொத்தலாவல. மன எழுச்சி கொடுப்பதில திரு கொத்தலாவல கைதேர்ந்த வீரர். சிங்கக் கொடியைப் பிடியுங்கள், மன எழுச்சி, ஆக்ரோஷம் தானாக உண்டாகுமென்கிறார் அவர். படை வகுத்தாச்சு, சிங்கக் கொடியுடன் மன எழுச்சியும் பெறாது விட்டது. ஆகவே, "மந்திரிகளே நீங்கள் யார் மீது படை எடுக்கப்போகிறீர்கள்?" என்பதைத்தான் நாம் இவர்களைக் கேட்கவேண்டியிருக்கிறது.

யார் மீது படையெடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் என்பதையும் மறைவாகச் சொல்லிவிட்டார் திரு கொத்தலாவல. அடிமைப்புத்தியுடன் இந்தியத்தேசியக் கொடி அமைக்கப்பட்ட முறையை இலங்கையில் கையாளுதல் ஆகாது என்று அவர் கூறுகிறார். அப்படிக் கையாண்டால் "யூனியன் ஜாக்" கொடியை, இந்துஸ்தானத்தின் கலை புச்சாதிக்கொடியால் மாற்றி வைத்ததாக முடியும் என்றும் திரு கொத்தலாவல சொல்லியுள்ளார். இலங்கையில் வதியும் சகல மக்களும் விரும்பக்கூடிய தேசியக் கொடியை அமைத்துக்கொள்ளுமாறு கேட்டவர்கள் சிறுபான்மையர்தான். ஆகவே அவர்கள் மீதா படையின் நோக்கம் செல்லவிருக்கின்றது என நாம் கேட்கிறோம். பிரிட்டிஷார் இலங்கையைவிட்டு இன்னும் வெளியேறாமலே, இலங்கையில் வயிறு வளர்க்க எண்ணினதாவிருக்கிறார்கள். இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால்தான் பிரிட்டிஷார் மீண்டும் நூறு வருடத்திற்கு இங்கு காலங் கழிக்கலாம். சிங்கள மந்திரிகளே உங்கள் தேசப் பற்று இதுவா? நீங்கள் பெற இருக்கும் டொமினியன் அந்தஸ்து இதுவா?

இதுதானா உங்கள் சுதந்திரம் இத்தகைய மன எழுச்சியுடன் நீங்கள் வெகு தூரம் செல்ல மாட்டீர்களென்பதை நாம் உறுதியாகக் கூற முடியும். மந்திரிகளுக்கு தேசியத்திற்குத் தயார் செய்யும்பொழுது, சிறுபான்மையர் எவ்விதம் அவர்களுடன் ஒத்துழைப்பர்? அப்பாவிகளான சிங்கள மகா ஜனங்களை வகுப்பு வாதிகளாக்கத் தூண்டும், மந்திரிகளின் இச் செயலகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உண்மைச் சிங்களத் தேசிய தலைவர்கள் ஒருவருமா இலையா?

திரு கொத்தலாவல, இந்திய முறையைத் தேசியக் கொடி விஷயத்தில் கையாண்டால், இலங்கை இந்திய மயமாய்விடுமென்றும் பயப்படுகிறார். இன்று சிங்கள மக்களின் நடை, உடை, பாவனை எல்லாம் எப்படி இருக்கின்றதென திரு கொத்தலாவல அவர்களைக் கேட்கின்றோம்? அத்துடன் இலங்கை மக்களின் கல்வி கலை கலாச்சாரம் எல்லாம் யாரை ஒடி இருக்கின்றது? இங்கு வந்தவர்கள் தாம் எங்கிருந்து வந்தார்கள்? திரு கொத்தலாவலையின் ஆதித தந்தையாகிய விஜயகுமாரன் எங்கிருந்து வந்தான்? இலங்கை உலக சமுதாயத்தில் உன்னதஸ்தானத்தைப் பெற வேண்டுமானால், இந்தியன், தமிழன், சோனகன், பறங்கி என்ற வகுப்புக் துவேஷத்தை திரு கொத்தலாவல போன்ற சிங்கள வகுப்புவாதிகள் உடனே கைவிடவேண்டும்.

சீனி-மாவு வந்துசேர்ந்தன

[கொழும்பு அக்டோபர் 29

மொம்பாஸாவில் இந்து கடந்த வாரப் பகுதியில் வந்து சேர்ந்த "இஸிப்பிங்கோ" என்னும் கப்பலில் 2000 டன் சீனி இலங்கைக்கு வந்துள்ளது. இதே இடத்திலிருந்து வந்த "கபாரிதா" என்னும் கப்பல் 2000 டன் சீனியுடன் நேற்று முன்தினம் வந்துள்ளது. இதில் 735 டன் பொதுப் பொருள்களும் வந்துள்ளன. இப்பொழுது துறைமுகத்திலுள்ள "மேர்ட்டின்பாஸ்" என்னும் கப்பலில் 8400 டன் ஆஸ்திரேலிய மாவு வந்துள்ளது. 30-ம் தேதியும் 8530 டன் மாவுவருமென எதிர்பார்க்கப் படுகிறது.

* * *

வெள்ள அகதிகளுக்கு ஜவுளி விநியோகம்

பேலியகொடை, கஸ்கொடை, பேலியகாவத்தை, பதஹெலாவத்தை ஆகிய இடங்களில் வெள்ள அகதிகளுக்கு ஜவுளி சப்ளை செய்யப்படுவது திருப்திகரமாக இல்லையென்று கூறி, ஒரு தூதுக்கோஷ்டி திரு. டி. பி. ஜெயசூரியா தலைமையில் (பாராளுமன்ற அங்கத்தவர்) மேல் மாகாண சர்க்கார் ஏஜண்ட் திரு. சடபரிஸ பேட்டி கண்டது. நடவடிக்கை எடுப்பதாக சர்க்கார் ஏஜண்ட தெரிவித்துள்ளார்.

* * *

டாக்டர் திருச்செல்வம் இலங்கை திரும்பினார்

அமெரிக்காவுக்கு நோக்பெல்லர் ஆராய்ச்சி உபகாரச் சம்பளத்தில் சென்ற வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். எல். திருச்செல்வம், சுமார் 15 மாத காலம் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் இந்து பயிற்சிகளை முடித்துக் கொண்டு கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

* * *

சமூகசேவைப் பயிற்சிக்கு பிரிட்டன் செல்வார்

இளங் குற்றவாளிகளை நல்ல குணமுடையவர்களாகவும் குற்றம் மேற்கொண்டு செய்யாமலும் இருக்கப் பயிற்சியளிக்கும் ஸ்தாபன மானேஜர் திரு. ஜோன் வி. ஹில் என்பவருக்கு சமூகசேவை சம்பந்தமாக பிரிட்டனில் விசேட பயிற்சி பெறுவதற்கு, இரண்டு வருட சர்க்கார் உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

* * *

சுப்ரீம் கோர்ட் புதிய நீதிபதி

சுப்ரீம் கோர்ட் புதிய நீதிபதியாக நியமிக்கப்பட்ட திரு எச் எச் பஸநாயகா இன்று பிரதம நீதிபதிமுன் விசுவாச பிரமாணம் செய்துகொள்வார். அதன் பின்னர் இவர் அப்பீல் கோர்ட்டில் நீதிபதி திரு ஜயதிலகாவுடன் இருப்பார்.

* * *

நீர்கொழும்பு அசைஸ் கோர்ட்

நீதி மந்திரியின் நிரந்தர காரியதரிசியாக நியமிக்கப்பட்ட திரு எச். டி. குணசேகராவுக்குப் பதிலாக நீர்கொழும்பு அசைஸ கோர்ட்டில் வியாழக்கிழமை முதல் ஸர் பிரான்ஸிஸ் ஜுன் தலைமைவகித்து விசாரணை நடத்துவார்.

திரைமறைவில் திரு. சிற்றம்பலத்தின் ஆட்டம்

தமிழ்க் காங்கிரஸ் காரியதரிசி சந்திக்கிழுத்து அம்பலப்படுத்துகிறார்!

முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்து கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்து கொண்டு கல்லெறியும் விந்தை

மந்திரி பதவி மோகத்தில் மதிமயங்கி கூட்டாளிகளைக் காட்டிக்கொடுத்த வண்டவாளம்

ஐயா,

சமீபத்தில் பல பத்திரிகைகளிலும் வெளிவந்த திரு ஸி. சிற்றம்பலத்தின் நீண்ட கடிதம் எங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. கண்ணாடி வீட்டில் வசிக்கும் ஒருவர் பலங் கொண்ட கோட்டைக்குள் வாசம் செய்யும் மக்கள் மீது கல்லெறிவதென்றால் அதில் ஏதோ விஷயம் இருக்க வேண்டும்.

திரு சிற்றம்பலத்தைப்பற்றி பொது மக்களுக்கு வெளியிட வேண்டிய உண்மைகள் இருந்தும் அவ்விதம் செய்யாது இதுவரை இருந்தோம். ஆனால் அவரது நடவடிக்கையின் பயனாக இப்பொழுது உண்மை விபரங்களை பொதுமக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அவற்றின் பிரதிபலன்களை திரு சிற்றம்பலம் அனுபவிப்பாராக.

திரு சிற்றம்பலம் பலதடவைகள் நீண்ட கடிதங்களை அளவுக்கதிகமாக காங்கிரஸ் தலைவருக்கும், எனக்கும் பொது நண்பர்களுக்கும் எழுதியுள்ளார். அவற்றில் மீண்டும் மீண்டும் அவர் வற்புறுத்திக் கூறியுள்ள விஷயங்கள் வருமாறு:-

1 திரு ஜீ ஜீ பொன்னம்பலம் மன்னாருக்கு ஏற்கெனவே வராததற்கு மனம் வருந்துவதாக தெரிவித்து, ஜூன், ஜூலை மாதங்களில் தானும் அவர் வந்திருப்பின், அதனால் திரு தியாகராஜாபயந்து இருப்பாரென்றும் அதனால் போட்டி ஏற்படுவதைத் தடுக்க முடியுமென்றும் எழுதியுள்ளார். "இத்தொகுதிக்கு உங்கள் ஆதரவிலும் உங்கள் கட்டுப்பாட்டின் கீழும் தான் போட்டியிடுகிறேன். நானும் எனது மனைவியும் நண்பர்களும் உங்கள் கட்டளைகளின்படி வேலை செய்வோம்" என மேலும் தெரிவித்துள்ளார்.

2. அவரது நிலைமை மன்னாரில் பலங் குறைந்திருப்பதாகவும் திட்டமான நடவடிக்கைகளை எடுக்க முடியவில்லையென்றும் கூறி உடன் உதவி கோரினார். பல வாரங்களாக அவர் முயற்சி எடுத்தும் அவருக்கு மன்னாரில் ஒருவராவது வீடு வாடகைக்கு கொடுக்க முடியவில்லையென்றும் அதற்கு அவர் அவசரமாக வீடுக்கு வேண்டுகோளுக்காக நாங்கள் வீடு தேடிக் கொடுக்க வேண்டியிருந்தது.

3. யூ. என். பி யின் தகிடுதத்தங்களை வெளிப்படுத்துவதற்காக "யூ என். பி என்றால் என்ன?" என்னும் பிரசுரத்தின் தமிழ்ப் பிரதிகளையும் யாழ்ப்பாண திருச்சபையின் கொள்கையை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய காலஞ் சென்ற மேற்றிராணியாரின் தேர்தல் அறிக்கையின் தமிழ்ப் பிரதிகளையும் ஆயிரக்கணக்கில அனுப்பிவைக்கும்படி அவர் கோரியிருந்தார்.

(4) காங்கிரஸ அமைப்பாளரும், தொண்டர்களும் நூற்றுக்கணக்கில் வேண்டுமென மீண்டும் மீண்டும் தந்திகள் அனுப்பினார்.

(5) தேர்தல் ஒழுங்குகள் சரியான முறைப்படி இல்லையென்றும் காங்கிரஸ் தனது உதவிக்கு வந்து நிலைமையைப் பாதுகாக்காது விட்டால் தேர்தல் தினத்துக்கு 15 நாட்களுக்குமுன் தாம் தேர்தலில் நிற்றும் விலகப் போவதாகப் பயமுறுத்தினார்

(6) யூ என். பி. அபேட்சகரை எப்போதும் "துரோகி" என்று குறிப்பிட்டு வந்தார் தாம் திரு சேனநாயக்காவின் நெருங்கிய நண்பனாக இருந்தாலும், எங்களை கைவிடமாட்டார் என்று திரும்பவும் பல தடவைகளில உறுதியளித்தார்.

(7) ஆகஸ்ட்மாத நடுப்பகுதியில் திரு. சிற்றம்பலம் எல்லா இடங்களிலும் காங்கிரஸ வெற்றியடையமாட்டாதென்றும் ஆனால் காங்கிரஸ உதவியுடன் தாம் மன்னாரில் வெற்றியடைந்தால் மற்ற இடங்களில அடையும் தோல்விகளை இவ்வெற்றி சமன் செய்து கொள்ளுமென்றும் குறிப்பிட்டார்.

(8) யாழ்ப்பாணத்தில் காங்கிரஸ வெற்றியடைந்தபின் யூ. என். பி-காங்கிரஸ கூட்டு சர்க்கார் அமைப்பு ஏற்படுமென்று தந்தி உலாவியபோது பொது மேடைகளில் திரு. சிற்றம்பலம் பல தடவைகளில், திரு ஜீ ஜீ பொன்னம்பலம் அல்லது மற்றும் காங்கிரஸ அங்கத்தினர் பதவி ஏற்றபின் தமிழ்க்காங்கிரஸின் முதல் எதிரியாக தாம் மாற வேண்டியிருக்குமென்று கூறினார். ஆராதூரியானதும் பரந்ததுமான திரு சிற்றம்பலத்தின் கடிதங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிக்க விரும்பவில்லை ஆனால் அவற்றை நேரில் பார்வையிடுவதற்கு ஒழுங்குகள் செய்துகொள்ளப்படலாம்.

மன்னாரில் காங்கிரஸ திரு சிற்றம்பலத்துக்கு அளித்த ஆதரவில் ஒரு சிறு துளியை திரு சிற்றம்பலம் யாழ்ப்பாணத்தில் ஆற்றிவிருக்கக்கூடும் தங்களுடைய குடும்பங்களையும் விட்டு தங்கள் நலனகளையும் கவனியாது பல வார காலங்களாக மன்னாரில் பல முக்கியஸதர்கள் தங்கள தொண்டுகளை ஆற்றியுள்ளனர் யாழ்ப்பாணத் தேர்தல் முடிந்ததும் (5-ம் தேதி பே) காங்கிரஸின் முன்னணி வேலையில் ஈடு பட்ட ஒருபகுதி நேராக மன்னார் சென்றுள்ளது வவுனியாவில் ஆகஸ்ட் 8-ம் தேதி நடந்த தேர்தலில் எங்களது கட்சியின் அதிகார பூர்வமான அபேட்சகருக்கு அதிக உதவிகள் வேண்டியிருந்தும் இப்பகுதியினர் மன்னாருக்கு அனுப்பப்பட்டிருந்தனர். திரு. பொன்னம்பலம் 8-ம் தேதி காலை மன்னார் சென்றார். அவரைத் தொடர்ந்து நானும் 9-ம் தேதி அங்கு சென்றிருந்தேன் 9ம் தேதி மாலையிலும் அதற்குப் பின் இரு தினங்களிலும் 300க்கு அதிகமான காங்கிரசைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் அங்கு வந்து சேர்ந்தனர். மன்னார் தேர்தல் 13-ம் தேதி நடைபெற்றது

இந்த காங்கிரஸ தொண்டர்கள் திரு. சிற்றம்பலம் காங்கிரஸின் 'முதல் பொது நண்பன்' என்று நம்பியதாலேயே மன்னாருக்குச் சென்றனர் சகலவசதிகளுடைய வீடுகளில் சந்தோஷமாகவசித்துவந்தபெண்கள் இத்தொகுதியிலுள்ள இடைஞ்சல்களையும் வசதியீனங்களையும் அனுபவித்துக் கொண்டும் பெருந் தொண்டாற்றியுள்ளனர். அநேக தொண்டர்கள் விரோதமான பகுதிகளில் உணவுக் கஷ்டம் இருப்பிட வசதியீனங்கள் தண்ணீர்க் கஷ்டம் ஆவற்றையெல்லாம் சகித்துக்கொண்டும் மன்னார் ஜில்லாக் காட்டுப் பகுதிகளில வேலை செய்துள்ளனர். திரு. சிற்றம்பலத்தின் நன்றி மறந்த இச்செய்கையால் இத்தொண்டர்கள் மனித சுபாவத்தின்மீதுள்ள நம்பிக்கையில் பெரும் பகுதியை இழந்துவிடுவரென்றே கூறவேண்டும்

திரு சிற்றம்பலம் குற்றஞ்சாட்டும் "சுதந்திரன்" பத்திரிகை தேர்தல் போராட்டத்தில் முழு மனதுடன் திரு சிற்றம்பலத்தை ஆதரித்துள்ளது அதன் சேவைகளை திரு சிற்றம்பலமே பாராட்டியுள்ளார். தமிழ்க் காங்கிரஸ 'சுதந்திரன்'மீது எவ்வித ஆதிக்கமும் வைத்திருக்கவில்லை: திரு சிற்றம்பலத்தின் ஏமாற்றமபற்றி வாசகர்களின் கடிதங்களை சுதந்திரன் வெளியிட்டால் அதனைக் தடுப்பது காங்கிரஸால முடியாது.

மன்னார் தொகுதிக்கு திரு சிற்றம்பலத்தின் பெயரை திரு பொன்னம்பலம் பிரகடனம் செய்யவில்லையென்று அவர் குறை கூறுகிறார். வட இந்யாவில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டும், சுயேச்சை அபேட்சகரானதுடன் ஓரளவில்சர்க்கார்சேவையிலும் அவர் இருக்கும் முறையில தமிழ்க் காங்கிரஸதலைவர் எங்ஙனம் அறிவிக்கமுடியும்? திரு பொன்னம்பலத்தை நேரில் நன்கு தெரிந்து கொண்டுள்ள திரு சிற்றம்பலம் மீண்டும் மீண்டும் திரு பொன்னம்பலத்தின் மைத்துனர்மூலம் இதுபற்றி சொல்லியனுப்பியதாகக் கூறியிருப்பதும் நகைப்புக்கிடமானதாகும்

மன்னார் தொகுதியில் திரு தியாகராஜாவுடன் போட்டியிட லாகலத்திலுள்ள ஒருவரை நிறுத்தும்படி திரு சிற்றம்பலம் எங்களுக்குப் பல முறை கூறியது உண்மை தமது பெயரை அறிவித்திருந்தால் இவர்கள் நியமிப்பவருடைய சார்பாக தாம் தேர்தலில் இருந்து வாபஸ பெறுவதாகவும் சொன்னார்.

காங்கிரஸ தொண்டர்கள், திரு தியாகராஜாவுக்குச் சார்பாக வேலை செய்தனர் என்று கூறப்படுவதெல்லாம் பொய்யானதாகும் இவ்வாறு ஆரம்பத்திலேயே திரு அழகக்கோன் தமிழ்க் காங்கிரஸில இருந்து ராஜினாமாச் செய்துவிட்டார்,

திரு பொன்னம்பலத்துக்காக தாம் யாழ்ப்பாணத்திலும், தமக்காக திரு. பொன்னம்பலம் மன்னாரிலும் வேலை செய்ததினால் இருவரும் தங்கள் தங்கள் உதவிகளுக்காகக் கடமைப்பட்டவர்களாக இருக்கவேண்டியதில்லையென திரு சிற்றம்பலம் வாதிக்கின்றார் இது அர்த்தமற்ற வாதமாகும் பெரிய காங்கிரஸ ஸதாபனம் அவருக்கு பாதுகாப்பளித்ததுடன் பிரச்சாரத்துக்கு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும், இவரை ஆதரித்து தனிப்பட்ட முறையில் 'சுதந்திரன்' விஷயங்களை வெளியிட்டதும் திரு பொன்னம்பலத்தின் தனிப்பட்ட முறையிலல்ல யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் யூ. என். பி க்கு எதிராக இரு பகுதியினரும் வேலை செய்து அரசியல் விஷயதில் யூ என. பி.க்கு எதிரான தமது கொள்கையை உறுதிப்படுத்தவே காங்கிரஸில் சேரும்படி திரு சிற்றம்பலத்தை நாங்கள் கேட்கவில்லை; ஆனால் அவர் எங்களுடன் சேர்ந்து நடந்து கொள்ளுவாரென நாங்கள் எதிர்பார்த்தோம் தமிழ்க் காங்கிரஸிற்குத் துரோகம் செய்து திரு பொன்னம்பலத்துக்கோ அன்றி காங்கிரஸிற்கோ தமது முடிவைப் பற்றி ஒன்றும் கூறாது திரு சேனநாயக்காவின் கட்சியில் சேர்ந்து கொண்டது எதிர்பார்க்க முடியாததும் மன்னிக்க முடியாததுமானதாகும்

வாக்களிக்கும் தினத்துக்கு முதல் நாள் தாம் தமிழ்க்காங்கிரஸில் சேரமாட்டேனென்று உறுதியளித்ததாக திரு சிற்றம்பலம் கூறுகின்றார் அன்றையதினம் முழுவதும் நான் அவருடன் இருந்தேன். எருக்கலம்பிட்டியில் கடைசி கூட்டத்தில் பேசுகையில் தாம் யூ. என். பி.யை எதிர்ப்பதாகவும் அதில் தான் சேரமாட்டாரென்றும் கூறினார் தமது அரசியல் கொள்கைகள் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வாவின் கொள்கைகளைப் போன்றவையேயென பல தடவைகளில் அவர் கூறியுள்ளார்.

மன்னாரில ஒரு கூட்டத்தில் பொது மேடையில் பேசுவதற்கு திரு பொன்னம்பலத்தை அழைத்து திரு சிற்றம்பலம் அழைத்திருக்கிறதைக் கடைசியாகக் குறிக்க விரும்புகிறோம். இதுகருதற்றதும் முடிவில்லாததுமாகும்.

திரு. சிற்றம்பலம் கூறியுள்ளபடி தமது பதவியை ராஜினாமா செய்துவிடு மீண்டும் மன்னாரில் ஒரு தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகருடன் போட்டியிடுப் பார்க்கும்படி நாங்கள் அழைக்கிறோம். அவர் வெற்றியடைந்தால் அதனால் அவருக்கு ஏற்படும் செலவுகளைக் கொடுப்பதற்கு நாங்கள் பொறுப்பு ஏற்கிறோம்.

டாக்டர் எஸ். வி. நாநாதன்,
அ. இ. த. காங்கிரஸ் கௌரவ கூட்டுப் பொதுக் காரியதரிசி.

தீபாவளி வேண்டாம்

காந்திஜியின் கருத்து

உதகமண்டலம், அக். 26

"தலைவர்களும் பட்டினியும் கொண்டிருக்கையில் நடப்பதால் இவ்வருடம் தீபாவளிக் கொண்டாட்டத்தை நடத்தலாமா? என்று உதகமண்டலம் ஸ்ரீ பொன்னுசாமி எழுதிக் கேட்டதற்கு மகாத்மா மிக அழுத்தமாக "வேண்டாம்" என்று பதிலளித்திருக்கிறார்.

அகில உலக தமிழர் மகாநாடு

டிசம்பர்மாதம் சென்னையில் கூடும்

தமிழ் எழுத்துக்களின் தனிச் சிறப்பு

உலக மொழிகள் அனைத்தையும் ஒலிவழுவின்றி தமிழ் எழுத்துக்களில் பொறிக்க முடியும்

சென்னை, அக். 27

நேற்று மாலை சிந்தாதிரிப்பேட்டையில ஸ்ரீ எஸ். வெங்கடேசய்யங்கார் தலைமையில் நடைபெற்ற அகில உலக தமிழர் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டிக் கூட்டத்தில்மகாநாட்டுப்பல்வேறு அலுவல்களைக்கவனிக்க பல கமிட்டிகள் நியமிக்கப்பட்டன.

இந்த மகாநாடு எஸ். ஐ ஏ மைதானத்தில டிசம்பர் 20, 21-ம் தேதிகளில் நடைபெறும்

டெலிகேட் கட்டணம் ரூ 1ம் சாப்பாடு இடவசதிக்காக ரூ 3ம் வளண்டர் கட்டணம் ரூ 4ம் வசூலிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்தரீகளுக்குக் கட்டணம் எதுவும் கிடையாது.

"உலகப் பொது தமிழ் எழுத்தொலி"

கோயமுத்தூர், அக் 27

ஸ்ரீ மு கோவிந்தராய நாடுடா பி ஏ எல். டி கோயமுத்தூர் அரசாங்கக் கல்லூரியிலும் கோவைக் கலைவளர் கழகத்தின் சார்பிலும் 15-10-47,16 10-47 18-10-47 நாட்களில் "உலகப் பொது தமிழ் எழுத்தொலி" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். முதல் இரண்டு நாட்களிலும் ராவ்பகதூர் சி எம். இராமசந்திரன் செட்டியார் பி ஏ. பி எல், தலைமை தாங்கினார். மூன்றும் நாள் துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் தலைமையின் கீழ் பேசினார் திருநாட்டார்தொலகாப்பியதிற் கூறியபடி தமிழ்எழுதொலிகளை விரிவாக விளக்கிக் கூறி, தமிழ் எழுத்துக்களைக் கொண்டு உலக மொழிகள் அனைதையும் சிறிதும் ஒலி வழுவின்றி எழுதமுடியும் என்பதை விளக்கினார். முடிவில் ஆங்கிலம் வடமொழி இவைகளைத் தமிழ் எழுத்தால் எழுதிக்காட்டினார்கள்.

'தனித் தமிழ் மாகாணம் சாத்தியமே'

தோவாளை, அக் 2

தோவாளை தி. த. நா. காங்கிரஸ அன்பர்கள் சார்பில் இன்றுமாலை ஸ்ரீ ஆர் தாணுபிள்ளை பி ஏ. பி எல தலைமையில ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தி த நா. காங்கிரஸ்தான் தமிழர்களின் ஒரே அரசியல் ஸ்தாபனம் எனபதை தக்க காரணங்களோடு தலைவர் எடுத்துக் கூறினார்.

ஸ்ரீ எம் ஷண்முகம்பண்டைத் தமிழர்களின வீரம், கொடை இகுண விசேஷங்களை இலக்கிய சரித்திர சான்றுகளோடு விளக்கி திருவிதாங்கூர் தமிழர்களாகிய நாம் தமிழ் மாகாண அமைப்பிலே காட்டவேண்டிய வீரத்தினையும் பொருளாதார அடிப்படையில் மலையாளிகளுக்கு ஏற்பட்டதன் காரணங்களையும் அது பொருளாதார அடிப்படையில் எவ்வளவு சாத்தியம் என்பதையும் தக்க காரணங்களோடு விளக்கி தமிழ் நாட்டில் வாழும் அத்தனைபேரும் திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரசை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ எம். சங்கரலிங்கம் பேசுகையில் தி. த. நா. காங்கிரசின், தோற்றம் வளர்ச்சி இன்றைய நிலை, இவைகளை விளக்கி, இன்றைய இந்திய அரசியல் நிலைமை நமது கோரிக்கைக்கு எவ்வளவு தூரம் சாதகமாகஇருந்து வருகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறினார்

ஸ்ரீ எம சண்முகம் முற்கால சேர பரம்பரை தற்கால தமிழர் நிலை அவர்களது கடமை சல தலைவர்களின் பொறுப்பற்ற போக்கு பற்றி பேசினார்.

ஸ்ரீ கே. சி தாணு திருவிதாங்கூர் தமிழர்கள் நிலைமை வருகின்ற தேர்தலில் தமிழர்களின் பொறுப்பு பற்றி பேசினார்.

ஸ்ரீ டி. நாகலிங்கம் தலைவர் தி த. நா. மாணவர் காங்கிரஸ் பேசுகையில், தி. த. நா. காங்கிரசுக்கு மாணவர் செய்ய வேண்டிய கடமைகள் குறித்துப் பேசினார்.

அகில உலக தமிழர் மகாநாடு

டிசம்பர்மாதம் சென்னையில் கூடும்

தமிழ் எழுத்துக்களின் தனிச் சிறப்பு

உலக மொழிகள் அனைத்தையும் ஒலிவழுவின்றி தமிழ் எழுத்துக்களில் பொறிக்க முடியும்

சென்னை, அக். 27

நேற்று மாலை சிந்தாதிரிப்பேட்டையில ஸ்ரீ எஸ். வெங்கடேசய்யங்கார் தலைமையில் நடைபெற்ற அகில உலக தமிழர் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டிக் கூட்டத்தில்மகாநாட்டுப்பல்வேறு அலுவல்களைக்கவனிக்க பல கமிட்டிகள் நியமிக்கப்பட்டன.

இந்த மகாநாடு எஸ். ஐ ஏ மைதானத்தில டிசம்பர் 20, 21-ம் தேதிகளில் நடைபெறும்

டெலிகேட் கட்டணம் ரூ 1ம் சாப்பாடு இடவசதிக்காக ரூ 3ம் வளண்டர் கட்டணம் ரூ 4ம் வசூலிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்தரீகளுக்குக் கட்டணம் எதுவும் கிடையாது.

"உலகப் பொது தமிழ் எழுத்தொலி"

கோயமுத்தூர், அக் 27

ஸ்ரீ மு கோவிந்தராய நாடுடா பி ஏ எல். டி கோயமுத்தூர் அரசாங்கக் கல்லூரியிலும் கோவைக் கலைவளர் கழகத்தின் சார்பிலும் 15-10-47,16 10-47 18-10-47 நாட்களில் "உலகப் பொது தமிழ் எழுத்தொலி" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். முதல் இரண்டு நாட்களிலும் ராவ்பகதூர் சி எம். இராமசந்திரன் செட்டியார் பி ஏ. பி எல், தலைமை தாங்கினார். மூன்றும் நாள் துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் தலைமையின் கீழ் பேசினார் திருநாட்டார்தொலகாப்பியதிற் கூறியபடி தமிழ்எழுதொலிகளை விரிவாக விளக்கிக் கூறி, தமிழ் எழுத்துக்களைக் கொண்டு உலக மொழிகள் அனைதையும் சிறிதும் ஒலி வழுவின்றி எழுதமுடியும் என்பதை விளக்கினார். முடிவில் ஆங்கிலம் வடமொழி இவைகளைத் தமிழ் எழுத்தால் எழுதிக்காட்டினார்கள்.

'தனித் தமிழ் மாகாணம் சாத்தியமே'

தோவாளை, அக் 2

தோவாளை தி. த. நா. காங்கிரஸ அன்பர்கள் சார்பில் இன்றுமாலை ஸ்ரீ ஆர் தாணுபிள்ளை பி ஏ. பி எல தலைமையில ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தி த நா. காங்கிரஸ்தான் தமிழர்களின் ஒரே அரசியல் ஸ்தாபனம் எனபதை தக்க காரணங்களோடு தலைவர் எடுத்துக் கூறினார்.

ஸ்ரீ எம் ஷண்முகம்பண்டைத் தமிழர்களின வீரம், கொடை இகுண விசேஷங்களை இலக்கிய சரித்திர சான்றுகளோடு விளக்கி திருவிதாங்கூர் தமிழர்களாகிய நாம் தமிழ் மாகாண அமைப்பிலே காட்டவேண்டிய வீரத்தினையும் பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுனைதத் நவாப், கராச்சிக்கு தப்பியோடிவிட்டார்!

மணவடார் சமஸ்தானாதிபதிகைது

இந்திய அரசியல் நிர்ணயசபை முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் ஓட்டம்

மௌலானா ஆஸாத் தலைமையில் புதிய முஸ்லிம் ஸ்தாபனம்

ராஜகோட், அக். 26

ஜுனைதத் நவாப் தமது பேகம்களுடனும், வாரிசுடனும் விமானத்தில் கராச்சிக்கு சென்றுவிட்டதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

இந்தத் தகவலுக்கு இங்கு ஊர்ஜிதம் கிடைக்கவில்லையெனினும், நவாப் கராச்சியில் குடியேறுவது சாத்தியமே என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

போட்டி சர்க்காருக்கு வெற்றி மேல் வெற்றி

இதற்கிடையில் ஜுனைதத் போட்டி சர்க்கார் சமஸ்தானப் பிரதேசங்களைக் கைப்பற்றும் திட்டத்தைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வருகிறது.

சனிக்கிழமை பிற்பகல் வரையில் அமராபுரியைச்சுற்றியுள்ள 16 கிராமங்களைப் பிடித்து விட்டதாயும் இன்று பகலுக்குள் மேலும் 7 கிராமங்கள் பிடிபட்டு விடுமென்றும் போட்டி சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறினார்.

மணவடார் கான் கைது?

மணவடார் கான் ராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு வரப்பட்டு கத்தியவாரிலுள்ள இந்திய சர்க்காரின் தளபதி கர்னல் ஹிம்மத் சிங்ஜியின் பங்களாவில் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக மற்றொரு ஊர்ஜிதமாகாத தகவல் கூறுகிறது.

ஓடிவிட்டார் கலிகுஜ்ஜமான்

லக்ஷ்மணபுரி, அக். 23

சமாதான தூதராகப் பாக்கிஸ்தானுக்குச் சென்ற இந்திய அ. நி. சபை முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் சௌதரி கலிக்குஜ்ஜமான் அங்கேயே நிரந்தரமாகக் குடியேறிவிட முடிவு செய்து விட்டார் என்று கூறப்படுகிறது. அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த 21 பேரும் அவருடைய மைத்துனர் ஸ்ரீ முகம்மது வாளிமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் ஸ்ரீ கலிகுஜ்ஜமானின் அழைப்பின் பேரில் தனியாக ஒரு ஸ்பெஷல் டகோட்டா விமானத்தில் கராச்சிக்கு சென்றனர்.

ஸ்ரீ முகம்மது வாளிம் சமீப காலம் வரை ஐக்கிய மாகாண அட்வகேட் ஜெனரலாக இருந்தார். அவருடைய மகன் ஸ்ரீ முகம்மது ஷாமிக் நவம்பர் முதல் வாரத்தில் கராச்சிக்குக் கிளம்பிச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நெருக்கடியான சமயத்தில் தங்களைக் கைவிட்டுச் சென்றதற்காக ஸ்ரீ கலிகுஜ்ஜமான் மீது இங்குள்ள லீக் வட்டாரத்தினர் ரொம்ப ஆத்திரமடைந்திருக்கிறார்கள். பாகிஸ்தான் சர்க்கார் ஸ்ரீ கலிகுஜ்ஜமானை ஒரு ஸ்தானிகராக நியமிக்கும் என்வதந்தி உலாவுகிறது.

ஆஜாத் தலைமையில் புது முஸ்லிம் ஸ்தாபனம்

புதுடில்லி, அக். 25

நவம்பர் 12, 13உ களில் தேசிய முஸ்லிம்களின் மகாநாடு நடக்குமென்று தெரிகிறது. இதைத் தொடர்ந்து டிசம்பரிலும் ஒரு பெரிய மகாநாடு நடைபெறும். இந்திய முஸ்லிம்களின் பிரதிநிதித்வ ஸ்தாபனமாக உள்ள ஒரு புதிய ஸ்தாபனத்தை தோற்றுவிப்பது தான் இந்த மகாநாட்டின் உத்தேசமென்றும் தெரிகிறது. பாக்கிஸ்தான் ஏற்பட்ட பிறகு முஸ்லிம் லீகிற்கு எவ்வித தலைமையோ அல்லது திட்டமோ இல்லை. மௌலானா ஆஜாத் தலைமையில் இந்த புதிய ஸதாபனம் முஸ்லிம் லீகிற்கு ஒரு தலைமையும் திட்டமும் ஏற்படுத்தும். இந்தியாவில் முஸ்லிம் லீக் இனி வேலை செய்ய முடியாதென்றும் தகுதியான வேறு ஒரு ஸதாபனத்தைப் பற்றித் தான் நாம் சிந்திக்க வேண்டுமென்றும் ஆஜாத்தும் கூறிவிட்டார்.

இந்த புதிய ஸதாபனம் காங்கிரஸுடனும் மதசிய மாகாண சர்க்காருடனும் மிகவும் நெருங்கி ஒத்துழைக்கும். பெருவாரியாக லீகர்களும் இதில் சேர்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுஹ்ரவர்த்தி மீண்டும் டில்லி திரும்பினார்

புதுடில்லி, அக். 26

சென்றவாரம் லாகூருக்குச் சென்றிருந்த ஸ்ரீ. எச். எஸ் சுஹ்ரவர்த்தியும், டாக்டர் தனஷா மேத்தாவும் நேற்றிரவு இங்கு வந்து சேர்ந்தனர். இவர்கள் இருவரும் மேற்கு, கிழக்கு பாஞ்சாலத்தில் மோட்டாரில் விரிவாக சுற்றுப் பிரயாணம் செய்தனர். பாக்கிஸ்தான் சாக்கார் மந்திரிகளையும் அவர்கள் சந்தித்து மைனாரிட்டிகளின் உரிமைகள் பற்றிய மசோதா ஒன்றை தயாரிக்கும் பிரச்னையை விவாதித்தனர்.

ஸ்ரீமதி மவுண்ட் பேட்டன்

புதுடில்லி, அக். 26

அக். 27-ம் தேதியிலிருந்து அக். 29-ம் தேதி வரை ஸ்ரீமதி மவுண்ட்பேட்டன் மேற்கு பஞ்சாப்பில் சுற்றுப் பிரயாணம் செய்வார் அகதிகள் முகாமிற்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் அவர் விஜயம் செய்து அகதி கோஷ்டிகளையும் பார்வையிடுவார்.

லாகூருக்கு ஜின்னா பயணம்

கராச்சி, அக் 26

பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப் ஜின்னா இன்று லாகூருக்குப் பயணமானார்

குடி வெறியில முறை கேடாக நடந்தார்

எதிரிக்கு ரூ. 150 அபராதம்

பாணந்துறை, அக். 27

குடிவெறி காரணமாக இணுவை ஆஸ்பத்திரிக்குள் புகுந்து முறை கேடாக நடந்து கொண்டதாகவும் அவரைக் கைது செய்ய முயற்சித்த போலிஸ் கான்ஸ்டபிளைத் தாக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்ட கடலானா வாசியாகிய வி. டி. டி. மெல என்பவருக்கு கோர்ட் கலையும்வரை சிறையும் ரூ 150 அபராதமும் மாஜிஸ்டிரேட் விதித்தார். அபராதம் செலுத்த தவறின் 4 மாதச் சிறை தண்டனையென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

ரூ. 1260 சம்பந்தமாக ஏமாற்றியதாக வழக்கு

மாத்தளை, அக். 27

நாவலப்பிட்டியிலுள்ள திரு. எஸ் எம். சுல்தான் என்பவர் மாத்தளையைச் சேர்ந்த அப்துல் ரஹமான் என்னும் வர்த்தகரை ரூ 1260 சம்பந்தமாக ஏமாற்றியதாக குற்றம் சாடிய வழக்கு கண்டி ஜில்லா கோர்ட் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டுமென நீதிபதி தீர்ப்பளித்தார்.

பிரான்ஸில் பொதுத் தேர்தல் நடக்காது?

பாரிஸ், அக். 27

பிரெஞ்சு அசெம்பிளிக்குப் பொது தேர்தல் நடத்த வேண்டும் என்று முனிசிப்பல் தேர்தல் வெற்றியின் பின்னர் ஜெனரல்டிகால் கூறினார் அல்லவா?

இதன் காரணமாக அசெம்பிளியில் குடியரசு வாதிகள் சோஷியலிஸ்ட் பிரதமர் மீது நம்பிக்கைத் தீர்மானம் ஒன்றுகொண்டுவருவார்கள். கம்யூனிஸ்டுகள் இவ்வோட்டளிப்பில் கலக்காமல் விடுவார்களாகையால் தீர்மானம் நிறைவேறும் என்றும் ஆகவே தேர்தல் நடத்த அவசியம் ஏற்படாது எனவும் அறியப்படுகிறது. (ராய்ட்டர்)

பெரும்பான்மை சமூகம் பெருந்தன்மையைக் காட்ட வேண்டும்!

வகுப்புவெறி மூட்டும் கொடியை தேசீயக் கொடியாக்குவதா?

வாளேந்திய சிங்கம் தமிழரை பயமுறுத்தும் சின்னம்

சிறுபான்மையோரை நசுக்குவது தேசீயர், ஜனநாயகம், நாகரீகத்துக்கு விரோதமான செயல்

(இலங்கைச் சர்வகலாசாலை மாணவன் த. கனகலிங்கம்)

சுதந்திர இலங்கைக்கு ஒரு தேசீயக் கொடி மிகவும் இன்றியமையாதது. இந்தத் தேசீயக் கொடி எவ்விதம் இருக்க வேண்டுமென்ற விஷயத்தில் பலர் தங்கள் அபிப்பிராயங்களை வெளிவிட்டிருக்கிறார்கள். சிங்களக் கொடியாகிய வாளேந்திய சிங்கம் கொடியைத் தேசீயக் கொடியாக்கவேண்டுமென்று சில நகர சபைகளும், தேசீய உடையைத் தரித்த வகுப்புவாதிகளும் மிகவும் பிரயாசைபடுகிறார்கள். இதன் பிரகாரம் கொழும்பு நகர சபை மண்டபத்திலும் பொதுக்கூட்டம் வைக்க ஆரம்பிக்கிறார்கள். இவர்களின் நோக்கம் என்னே? இவர்கள் எங்கள் அயல் நாடாகிய இந்தியாவின் உதாரணத்தை ஏன் பின் பற்றப்படாது?

அகில இந்திய தேசீயக் காங்கிரஸ் ஒரு வகுப்புவாதக் கட்சியென்றும் இந்துக்களின் சுய நலத்தையே பாதுகாக்கிறதென்றும் முஸ்லிம் லீக் பிரசாரஞ் செய்தது. இறுதியில் இந்தியா இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டது. முஸ்லிம் மக்கள் பிரத்தியேகமாக வாழ பாக்கிஸ்தான் பிறந்தது இவ்வாதம் நடந்தும் இந்திய அரசாங்கத்தின் பெருந் தன்மையைப் பாருங்கள். புதிதாக அங்கீகரிக்கப்பட்ட மூவர்ணக் கொடியில் சிறுபான்மை மக்களுக்கும் இடங்கொடுக்கப்பட்டது இதுதான் எங்கள் அயல் நாட்டின் அரிய கொள்கை.

ஆனால் எங்கள் நாட்டிலிருக்கும் சில பெரியவர்களின் முறை மிகப் புனிதமாக விருக்கிறது. சிங்களக் கொடியே தேசீயக் கொடியாக வேண்டுமென்று வாதாடும் சிலர் தற்போது இருக்கும் மந்திரி சபையிலும் இருக்கிறார்கள். இடபெரியாகளுக்கு தர்க்க முறை சூன்யம் தான். அவர்கள் வாதடும் சில அடி தலையில்லாத முறைகளை எடுத்துப் பார்ப்போம்.

(1) சிங்களவர்கள் தான் இலங்கையிற் பெரும் பான்மையோர் ஆதலால் சிங்களக்கொடியே இலங்கையின் தேசீயக் கொடியாக வேண்டும்.

(2) சிங்களக் கொடி மிகவும் சரித்திரப் பிரசித்தி பெற்றது. ஆதிகாலத்திலிருந்து வழங்கி வரப்பட்டது. ஆதலால் அதையே தேசீயக் கொடியாக்க வேண்டும்.

(3) இலங்கை சிங்களவரின் நாடு. ஆனபடியால் சிங்களவரின் கொடியே இலங்கையின் தேசீயக் கொடியாக வேண்டும்

(4) இலங்கையை அரசு புரிந்த தமிழ் மன்னனாகிய விக்கிரம ராஜசிங்காவின் கொடி இந்தச் சிங்களக் கொடியானபடியால், தமிழர் இக்கொடியை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால் இந்தச் சிங்களக் கொடி தேசீயக் கொடியாகுவது மிகவும் பொருத்தமல்ல. அதற்குப்பல காரணங்களுண்டு சிலவற்றையே பார்ப்போம்.

முதலாவதாக, இலங்கையிற் பல ஜாதியினர் வசிக்கிறார்கள் பெரும்பான்மையோர் சிங்களவர். மற்றும் தமிழர், முஸ்லிம் மக்கள், பறங்கியர், இந்தியர் முதலியோர் சிறுபான்மையினர். சிறுபான்மை மக்களைப் புறக்கணித்துப் பெரும்பான்மையோரின் கொடியை அகில இலங்கை தேசீயக் கொடியாக்குவது மிகவும் அநீதி, இந்த கட்சிகளுக்குமிடையிற் பகைமையும் அவநம்பிக்கையும் உண்டாகும். இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் அரசியல் வளர்ச்சிக்கும் சிறுபான்மை மக்கள் அடும்பாடுபட்டிருக்கிறார்கள். அடிமை நாட்டை சுதந்திர நாடாக்குவதற்கு சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களுடன் பரஸபர ஒற்றுமையுடன் பாடுபட்டார்கள். இனியும் பாடுபடுவார்கள். சிறுபான்மை மக்கள் இலங்கையை அயல் நாடாகக் கருதவில்லை; சொந்த நாடாகவே கருதி வந்தார்கள் அப்படியானால், தேசீயக் கொடியில் பங்கிருக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? பெரும்பான்மை மக்கள் தங்கள் பெருந்தன்மையைக் காட்டுவதற்கு இதோர் அரிய சந்தர்ப்பம். சுதந்திர இலங்கையில் எல்லா ஜாதியினரும் பரஸ்பர ஒற்றுமையுடனும், சகோதர பாவத்துடனும் வாழவேண்டுமானால் சிறுபான்மை மக்களை ஒரு காலமும் புறக்கணிக்கப்படாது.

இரண்டாவதாக, தற்பொழுது சிங்களக் கொடியென்றும், தேசீயக் கொடியென்றும்சொல்லி வரும் சிங்கக் கொடி ஆதிகாலத்திலிருந்து 1815-ம் வருஷம் வரைக்கும் இலங்கைச் சரித்திரத்திலே ராஜ சின்னமாகவே (ரோயல ஸ்டான்டர்ட்) இருந்தது. பொதுவாக அரசாளுகையிலேயே பறந்திருக்கும்; அரசன் போருக்குப் போகும் பொழுதும் ராஜ சின்னம் கொண்டுபோகப்படும். ராஜ சின்னமாகிய இந்தச் சிங்கக் கொடியைப் பொதுவான தேசீயக் கொடியாக்குவது மிகவும் பொருத்தமல்ல. ஒரு அரசன் காலத்திலே, இலங்கையில் பல கொடிகள் இருந்தன. மச்சுனுதிக்கொரு கொடியும், வெவ்வேறு உயர்ந்த உத்தியோகத்தர்களுக்கு வெவ்வேறு கொடிகளும், மாகாணங்களுக்கு விதவிதமான கொடிகளும், ஒரே காலத்திலிருந்தன. இது ஓர் சரித்திர உண்மை. ஆதலால், ராஜ வம்சத்தையும் அதிகாரத்தையும் உணர்த்தும் ராஜ சின்னமாகிய சிங்கக் கொடியைத் தேசீக் கொடியாக்குவது அவ்வளவு பொருத்தமல்ல

மூன்றாவதாக, கொடியிலிருக்கும் சின்னம் கையில் வாளேந்திய சிங்கம். இந்தச் சின்னம் யுத்த சூழ் நிலையைக் குறிக்கிறதென்று பலர் கருதுகின்றனர். கையிலேந்திக்கொண்டிருக்கும் வாளை போர் வாளென நாம் எண்ணிக்கொள்ளப்படாதென்றும், அது நீதி வாளாக விருக்கலாமென்றும் திரு. மெட்டகொடை என்பவர் சில தினங்களுக்கு முன் ஒரு ஆங்கில பத்திரிகையிலெழுதியிருந்தார் நாங்கள் அவரின் அபிப்பிராயப்படி எண்ணிக் கொண்டாலும் மற்ற நாட்டார் நாங்கள் நினைக்கும்படி நினைப்பார்களா? இவ்விஷயத்தைப் பற்றி திரு. கே எம் பி பெரேரா என்பவர் இம்மாதம் 24-ம் தேதி வெளிவந்த "ஓப்சேவர்" பத்திரிகையிலெழுதியிருந்தார். அவரின் கூற்று பின்வருமாறு:- "துட்டகமுனு அரசனின் காலத்தில் தமிழர் மேற் பலத்தைக் காட்டவே கொடியில் வாள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமென நான் அபிப்பிராயப்படுகிறேன்.', ஆனபடியால் இது தற்காலத்துக்கேற்ற கொடியல்ல. இந்திய அரசியல் நிர்ணய சபை அங்கீகரித்த மூவர்ணக் கொடியில் தர்மத்தையும், நீதியையும் சமாதானத்தையும் குறிக்கும் அசோக ஜெய சக்கரம் பிரதிபலிக்கிறது. இதை நாங்கள் மறந்துவிடப்படாது.

ஒரு நாட்டின் தேசீயக்கொடி அந்நாட்டு மக்கள் எல்லோரும் அதன் கீழ் ஒருங்கு சேர்ந்து போற்றும் கொடியாக விருக்க வேண்டும். சகல மக்களது விஸ்வாசத்தையும் பெறவேண்டும். இலங்கை தேசீயக் கொடி பிரச்னையானது இலங்கையில் வாழும் சகல மக்களின் சம்மதத்தின் பேரில்தான் முடிவு செய்யப்பட வேண்டும்.

பிரிட்டனுக்கு விஜயம் செய்யும் இத்தாலிய மந்திரி

பாரிஸ், அக். 27

பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி திரு. பெவினுடன் நடத்தப்படும் ஒரு மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு ரோமாபுரியில் இருந்து புறப்பட்ட இத்தாலிய அயல் நாட்டு மந்திரி கவுண்ட் கார்லோஸ்போர்ஸா இன்று காலை பாரிஸிற்கு வந்து சேர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது இத்தாலியின் கோரிக்கைகளை வெளிப்படையாகத் தாம் திரு பெவின் முன் தெரிவிப்பாரென புறப்படுமுன் ரோமாபுரியில் அவர் கூறினார். (ராய்ட்டர்)

சுங்க அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம்

கள்ள வர்த்தக காடையர் செயல்

ஹங்காங், அக் 27

பிரிட்டிஷ் எல்லையின் சமீபத்திலுள்ள நாலோராம உரலோ என்னுமிடத்தில் உள்ள சுங்க அதிகாரிகள் மீது கள்ளமாக வர்த்தகப் பொருட்களைக் கடத்தும் சுமார் 300 பேர்கள் கொண்ட கோஷ்டி நள்ளிரவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது காரணமாக நான்கு சீன கார்டுகள் காயமடைந்தனர். ஆறுபேர்கள் காணப்படவில்லை இவர்கள் கடத்திச் செல்லப்பட்டிருக்கவேண்டுமென்று கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

சுகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டிஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "சுகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி.
போன்:- 2193 கொழும்பு

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்
ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நோத்தீஸ் செய்து கொடுக்கப்படும்.
தேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி
இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.
இத்தோடு நிறம் லங்கா பிராண்ட் விளக்கரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்.
மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு
விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

கொழும்புச் செய்திகள்:

எம். பி. கள் சம்பளம்

கொழும்பு, அக். 29

பாராளுமன்றம் இம்மாதம் 14-ம் தேதி கூடி சபாநாயகரையும் உதவி சபாநாயகரையும் தெரிவுசெய்துள்ளதால் இச்சபையின் அங்கத்தினர்களுக்கு இம்மாத முடிவில் சம்பளம் அளிக்கப்பட வேண்டுமென்பது பற்றி நிதி அதிகாரிகள் ஆலோசனை செய்து வருகின்றனர். இவர்களது முடிவு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

* * *

முனிஸிபல் எஞ்சினியர் பதவி

கொழும்பு முனிஸிபல் சபை எஞ்சினியர் பதவி கடந்த ஒன்றரை வருடங்களாக காலியாக இருக்கிறது. இப்பதவிக்கு உடனடியாக ஒருவரை நியமிக்கும் படியும் தகுந்த ஒருவர் வெளியிடத்திலிருந்து நியமிக்கப்பட முடியாதுவிட்டால் சபையில் உள்ள சீனியர் முதல் கிரேட் எஞ்சினியர்களில் ஒருவரை உடனே அப்பதவிக்கு நியமிக்கும்படி உள்தலஸ்தாபன சர்க்கார் கமிஷனுக்கு முனிஸிபல் சபை தெரிவித்துள்ளது

* * *

ரயில்வே பிரயாண சலுகைகள்

பாராளுமன்ற அங்கத்தினர், மந்திரிமார், சினட்டர்கள் ஆகியோருக்கு ரயில்வேயில் இலவச முதல் வகுப்பு பிரயாணம் செய்வது, அவர்களது மோட்டார்களை ரயில் மூலம் செலவின்றி அனுப்புவது, தமது பணியாட்களை 3-வது வகுப்பு வண்டியில் அழைத்துச் செல்வது ஆகிய விஷயங்கள்பற்றி ரயில்வே அதிகாரிகள் ஆலோசனை செய்து வருகின்றனர், இப்பொழுதுள்ள நெருக்கடியான நிலையில் எல்லா வசதிகளையும் செய்துகொடுப்பது சாத்தியமாக இருக்குமென்று கூறுவதற்கில்லை, நிலைமை வெகு கவனமாகப் பரிசீலனை செய்யப்படுகிறது.

* * *

பர்மா அரிசி நிலைமை

இலங்கையின் விவசாயமுறைகளை நேரில் பார்த்துச் செல்ல இலங்கைக்கு பர்மாவினால் அனுப்பப்பட்டுள்ள விவசாய டிபுடி டைரக்டர் யூ. தெட்க, பர்மாவின் யுத்த முற்கால அரிசி உற்பத்திக்கு சமமாக அரிசி உற்பத்தி செய்து கொள்வது 1952-ம் ஆண்டிற்குப் பின்னரே முடியுமென்றும் இப்பொழுது சுமார் 90 லட்சம் ஏக்காதான் சாகுபடிக்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிலிருந்து கிடைக்கும் 30 லட்சம் டன் அரிசியில் அரைப் பங்கு தான் சர்வ தேச உணவு சபைக்குக் கொடுக்கப் படுவதாகவும் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் "முத்துச் சம்பா" போன்ற நல்லரக அரிசி வேண்டுமாயின் இந்த சர்வ தேச உணவுச் சபை மூலம இலங்கை கோரிக்கையைச் சமர்ப்பித்தால் இலங்கைக்கு அந்த ரக அரிசிகிடைக்கலாமென்றும் அவர் தெரிவித்தார்.

* * *

இளவரசி திருமணத்துக்கு பிரதமருக்கு அழைப்பு

இளவரசி எலிஸபெத்துக்கும் லெப்டினன்ட் பிலிப் மௌண்ட் பேட்டனுக்கும் நவம்பர் 20-ம் தேதி திருமணம் நடப்பதை முன்னிட்டு பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்காவுக்கும் ஸ்ரீமதி சேனநாயக்காவுக்கும் அழைப்பு வந்ததாக அறியப்படுகிறது. இங்குள்ள வேலை நெருக்கடி காரணமாக தமக்குச் சமூகமளிக்க முடியவில்லையென்று அவர் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

* * *

மோட்டார்-சைக்கிள் மோதுண்டன

கின்ஸிரஸ்தா-ரீஜண்ட்ரஸ்தா இரண்டும் சந்திக்கும் இடத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் ஒரு மோட்டாரும் சைக்கிளும் மோதுண்டன இதனால் சைக்கிளில் வந்த ஜே. ஏ. தோமஸ பெரேரா என்பவர் காயமடைந்தார். அவர் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு பின்னர் அனுப்பப்பட்டார்.

பாஹ்ரேன் தீவு கைப்பற்றப்படும்

பாரசீக சர்க்கார் ஏற்பாடு

டெஹ்ரான், அக் 27

பிரிட்டன்-பாரசீக உடன்படிக்கையான் பாஹ்ரேன் தீவு இகவரை பிரிட்டன் ஆதிக்கத்திலிருந்து வருகிறது. இதில் அதிகமான அரபி உற்பத்தியாகிறது. இத்தீவை மீண்டும் கைப்பற்ற இப்பொழுது பாரசீக சர்க்கார் ஏற்பாடு செய்கிறார்கள். அங்கு பாரசீகத் தருப்பை அனுப்பி அதைக் கைப்பற்ற சர்க்காருக்கு அதிகாரமளிக்கும் மசோதா பார்லிமெண்டில் கொண்டுவரப்படும்.

சோவியத் ஸ்தானிகர் வாலிப்ஸை

டெஹ்ரான், அக் 27

பாரசீகத்திலுள்ள சோவியத் ஸ்தானிகர் பாரசீக வாலின் 28-வது பிறந்த தின வைபவக் கிறுக்கு சமாதமளிக்கவில்லை. சோவியத் ஸ்தானிக காரியாலயத்தைச் சேர்ந்த 25 பேரில் 5 பேர் மட்டுமே வந்திருந்தார்கள். கடந்த வருஷம் பாரசீகப் பிரதமர் கவாம் சுல்தானுடன் ரஷியா ஒரு எண்ணெய் ஒப்பந்தம் செய்தது. இவ்வொப்பந்தத்தை சமீபத்தில் பாரசீக மஜ்லிஸ் நிராகரித்தது சோவியத் ஸ்தானிகர் சமாதமளிக்காததற்கு இதுவே காரணமாய் இருக்கலாம் என்று இங்கு பலர் எண்ணுகின்றனர். (ராய்ட்டர்)

பாரசீகத்தில் அமெரிக்க ஆதிக்கம்

லண்டன், அக் 28

லண்டனிலிருந்து வெளியாகும் சமியானிடு "டெய்லி ஒர்க்கர்" பாரசீக மஜ்லிஸ் சென்ற வாட சோவியத்-பாரசீக எண்ணெய் ஒப்பந்தத்தை சமீபத்தில் நிராகரிக்கிருப்பதைப் பலமாகக் கண்டித்தது. இதற்குக் காரணம் "அமெரிக்கா நெருக்கிய நெருக்கமே" என்றும் அது குறிப்பிட்டு பின்வருமாறு எழுதுகிறது:-

"இங்குள்ள எண்ணெய்யில் 42 வீதம் அமெரிக்காவின் நேரடி ஆதிக்கத்திலுள்ளது. இவ்வெண்ணெய்யில் ஒரு பகுதி வெளியில் போவதைத் தடுக்கிறார்கள். அமெரிக்கா ஆனந்தப் அடைகிறது. அதுவும் பாரசீகத்திற்குச் சாதகமான நிபந்தனைகளுடன் கூடிய சோவியத்-பாரசீகக் கம்பெனி நிறுவப்படுவது தமது ஏகாதிபத்தியக் கொள்கைக்குப் பாதகமாகும். மத்திய கிழக்கு எண்ணெய் இப்போது இங்கிலாந்து அமெரிக்க ஏகபோகமாக விளங்குகிறது" (ராய்ட்டர்)

பிரிட்டன் கிழக்கிந்திய கடற்படை

லண்டன், அக் 27

பிரிட்டனின் கிழக்கிந்திய கடற்படையும் தெற்கு அட்லாண்டிக் கடற்படையும் குறைக்கப்படமாட்டாதென்று நேற்று காமன்ஸ் சபையில் பாதுகாப்பு மந்திரி ஒரு அலெக்சாண்டர் தெரிவித்தார்

மந்திரி சபையின் அவசரக் கூட்டம்

கொழும்பு, அக் 29

மந்திரி சபையினர் நேற்று காலை எதிர்பாராத முறையில் பிரதம மந்திரியின் மந்திரி சபைக் கூட்டமொன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர் பொத்துவில் அங்கத்தவர் ஜனாப் எம். எம். இப்ராஹீம் ஸ்தலஸ் தாபன சுகாதார மந்திரியுடன் ஏற்பாடு செய்திருந்த பேட்டியை இதனால் நேற்றாரத்துச் செய்ய வேண்டி நேரிட்டது

அமெரிக்க சினிமா நடிகர்கள் கண்டனம்

வாஷிங்டன், அக். 28

ஹோலிவுட்டில் கம்யூனிஸ பரவியிருக்கிறதென்ற சந்தேகத்தில் அமெரிக்க கமிட்டி விசாரணை செய்வதை சினிமா நடிகர்கள் கண்டிக்க 25 நடிகர்களடங்கிய தூதுக் கோஷ்டி வாஷிங்டனுக்கு இன்று வந்தனர்.

சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு

பர்மா சுதந்திர மசோதா

பர்மா - பிரிட்டன் உடனபடிக்கை

லார்டு லிஸ்டோவல் விளக்கம்

லண்டன், அக் 27

பர்மா - பிரிட்டன் உடன்படிக்கையின்படி பிரிட்டன் ஜனவரி 6-ம் தேதி தனது அதிகார முழுவதையும் பர்மாவுக்கு மாற்றி விடும். இன்று பர்மா சுதந்திர மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

பத்திரிகா நிருபர் கூட்டத்தில் இன்று பிரிட்டிஷ் சர்க்காரின் பர்மா மந்திரி லார்டு லிஸ்டோவல் பின்வருமாறு தெரிவித்தார்:- சமாதான முறையில் பர்மா பிரிட்டிஷ் சாம்ராஜ்ய இணைப்பில்லா பரிபூரண மான சுதந்திரத்தைப் பெறுகிறது. சமத்துவமான கூட்டாளி என்ற அந்தஸ்தில் பர்மாவுடன் பிரிட்டன் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறது

மைனாரிட்டிகளுக்கு இருவிதத்தில் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது யாதொரு பிரதமான விதியாசமின்றி அவர்களுக்கு மெஜாரிட்டி வகுப்பினருக்குள்ளபடி சமத்துவமான சகல உரிமைகளுமுண்டு. இரண்டாவதாக அரசியல் திட்டம் சமஷ்டி முறையில் அமைக்கப்பட்டுள்ளதால் சகல வகுப்பினரும் சுதந்திரமாக வாழ பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

பர்மா சர்க்காருடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கு பாதுகாப்பு உண்டு. ஆனால் சர்க்கார் கைத்தொழில் சம்பந்தமாக திட்டங்கள் ஏற்படுத்தும் போது இக்கம்பெனிகளுக்கு நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு அவைகளைத் தாங்களே எடுத்து நடத்த உரிமையுண்டு. இரு நாடுகளுக்குமிடையே கூடிய சீக்கிரம் நிதி ஒப்பந்தம் ஏற்படும்.

பர்மாவிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகள் காலிசெய்யப்படும் ராணுவ தளவாடங்களையும் பிரிட்டன் பர்மாவுக்கு அளித்து விடும்.

நிதி ஒப்பந்தம்

ரங்கூன், அக் 27

பர்மா நிதிமந்திரி உடின் டுட் நிதி ஒப்பந்த சம்பந்தமாகப் பேசுகையில் பர்மா ஸ்டெர்லிங் பிரதேசத்திலிருக்கு மென்று தெரிவித்தார். (ராய்ட்டர்)

மகன் இறந்ததாக கனவு கண்டதாராம்

இரு மக்களுக்கும் கத்தக்குத்து காயங்கள்

அனுராதபுரம், அக் 28

சில நாட்களுக்கு முன் சின்னசாமி என்பவர் அனுராதபுரத்திலிருந்து இந்தியா சென்றதாகவும் ரயிலில் அவர் சென்றுகொண்டிருக்கையில் தமது மகன் நாகந் தீண்டி இறந்து விபானதாக கனவு கண்டதாகவும் அதனால் பிரயாணத்தை கைவிட்டுவிட்டு அவர் திரும்பி வீடுவந்ததாகவும் கனவுகண்ட அதே இரவு அவரது மக்கள் கறுப்பையா, கந்தசாமி ஆகிய இருவரும் கத்தியால் வெட்டப்பட்டதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்று கண்டதாகவும் கூறப்பட்டது. இது சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட நால்வரும் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஸ்டோரில் ரப்பர் திருட்டு

நால்வர் பிணையில் விடப்பட்டனர்

கொழும்பு, அக் 28

மெஸர்ஸ் கீல் அன் வால் டாக் கம்பெனியில் இருந்து 1900 ருத்தல் ரப்பரை திருடியதாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட ஏ. ஹிச்சையப்பு, வி. டயானிஸ், எம் தோலிஸ் சில்வா, பி. சமரசிங்கா ஆகிய நால்வரும் தலா ரூ 750 பிணையில் விடப்பட்டனர் வழக்கு விசாரணை நவம்பர் 11-ம் தேதிக்கு எடுக்கப்படும்.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரிப் பிரச்னை

நகர சபைத் தலைவர் தலைமையில் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 26

காங்கேசன் துறையில் உள்ள ராணுவ ஆஸ்பத்திரியை ஓர் க்ஷயரோக ஆஸ்பத்திரியாக மாற்ற அரசாங்கம் ஆலோசித்திருப்பதை ஆதரித்து காங்கேசன்துறை அமெரிக்கமிஷன் பாடசாலையில் ஒரு பொன்னம்பலம் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் தமது பேச்சில் கூறியதாவது:- 'ராணுவ ஆஸ்பத்திரியை ஒரு க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்கும் இப்பிரச்னை ஒரு சர்வதேசப்பிரச்னை மட்டுமே ஆகும் அப்படியிருக்க சுகாதார மந்திரி இது சம்பந்தமாக பொதுஜன அபிப்பிராயத்தைக் கலந்தாலோசிக்க நினைப்பது எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகின்றது. இது ஜனநாயகம் கதெட்டுச் செல்வதற்கு ஒரு அத்தாட்சி' எனக் குறிப்பிட்டார் அவர் மேலும் பேசுகையில் "இவ்விஷயத்தை நாம் தனிப்பட்ட சுய நல நோக்கில் பார்க்கக் கூடாது காங்கேசன் துறையில் உள்ள காணி விலை இறங்கிப் போகுமென்றோ, மக்களைத் தப்பான வழியிற் செலுத்தி நாம் மகத்தான தலைவராகலாம் என்றோ எண்ணக் கூடாது. க்ஷயரோக ஆஸ்பத்திரியினால் ரோகம் மக்களிடையே பரவுவதற்கு வழிகோலுமா என்பதை வைத்திய அறிஞர்களால் நிர்ணயிக்கப்பட வேண்டும். வைத்திய உலகு அங்ஙனம் ஏற்படாது என்று ஏகோபித்துச் சொல்கிறது அத்துடன் வடபகுதியில் க்ஷயரோகத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால் அதற்கு இக்கதைய ஆஸ்பத்திரி அவசியம் என்றும் கருதுகிறது" எனக் கூறினார்.

திருவாளர்கள் என். நடராஜா, வி. ராஜநாயகம், ஆர். டி. செல்லையா, வி. மாணிக்கவாசகர், எஸ். சிவானந்தம், எஸ். வி. சீனிவாசகம், முகாந்திரம் எம் கிருஷ்ணர் முதலிய பலர் பேசினார்கள்.

அரசாங்கம் ராணுவ ஆஸ்பத்திரியை க்ஷயரோக ஆஸ்பத்திரியாக்குவதை ஆதரித்தும், மயிலிட்டி கிராமக் கமிட்டி அதனை எதிர்த்துச் செய்த தீர்மானம் சட்டவிரோதமான தாகையால் அதனை அரசாங்கம் லட்சியம் செய்யக்கூடாதெனவும் இருதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கிராமக் கமிட்டித் தீர்மானம் சட்டவிரோதம் என்பதற்கு அது சங்கத்தின் நிகழ்ச்சி அட்டவணையில் சேர்க்கப்படாமலும், பெரும்பான்மை அங்கத்தினர் சமூகமளிக்காமலும் நடத்தப்பட்ட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டது. (ந-நி)

தப்பி ஓடிய இளங் குற்றவாளி

மட்டக்களப்பு, அக் 28

ஏறாவூரில் ரூ 216 நகையது சம்பந்தமாக கனது குற்றத்தை ஒப்புக்கொண்ட ஒரு முஸ்லிம் இளைஞன் புரபேஷன் அதிகாரியின் பாதுகாப்பில் இருந்து தப்பி ஓடிவிட்டதாக கூறப்படுகிறது. இக்குற்றவாளியைப் பிடிப்பதற்கு மாஜிஸ்டிரேட் வாரண்டு பிறப்பிக்க உத்தரவிட்டார்.

விவசாயி கொலை

களுத்துறை, அக். 28

நாகொடையில் கே. பபிலிஸ அப்பு என்பவருடைய தோட்டத்தில் சில மரவள்ளிச் செடிகளைப்பிடுங்கிய திருடர்களை பபிலிஸ அப்புவும் அவரது மகன் உதாரிஸும் தாக்கியபோது ஏ. சரரிஸும் என்பவர் இருவரையும் கத்தியால் குத்தியதாகவும் பபிலிஸ அப்பு ஸ்தலத்திலேயே மரணமடைந்து விட்டதாகவும் உதாரிஸ் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படடுள்ளதாகவும் கூறப்படுகிறது. கத்தியால் குத்தியவர் என்று கூறப்படுபவரை கைது செய்து ரிமாண்டில் வைத்துள்ளனர்.

இந்தோனேஷிய விவகாரம்

இந்தியா பிரதிநிதி எச்சரிக்கை

நியூயார்க், அக் 27

இன்று நடைபெற்ற பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் இந்தியாப் பிரதிநிதி இந்தோனேஷிய விவகாரத்தில் டச்சு செல்வாக்கிற்கு இடங்கொடுத்து வருவது பற்றி எச்சரித்தார் கவுன்ஸில் இந்த விவகாரத்தை நியாயமான முறையில் தீர்க்காவிடில் உலக சமாதானத்தை விரும்பும் நாடுகளின் நம்பிக்கையை இழக்க நேரிடுமென்றும் சுட்டிக காட்டினார்

இதற்கிடையே மூவர் கமிஷன் ஆஸ்திரேலியாவிலிருந்து படேவியாவுக்கு இன்று விஜயம் செய்தது. இக்கமிஷன் இந்தரப்பாரையும் விசாரிக்கும். அக்டோபர் 29-ம் தேதி ஜோக்ஜகர்த்தாவுக்குப் பயணமாகும்

பாலஸ்தீன பிரச்னை

நியூயார்க், அக் 27

ஐக்கியதேசபாலஸ்தீன கமிட்டியின் பிரிவினையைப்பற்றி பரிசீலனை செய்துவருகிறது இதில் அமெரிக்காவும் ரஷியாவும் பெளனம் சாதித்து வருகின்றன. கானடா பிரதிநிதி உருப்படியான யோசனை கூறி வருகிறார்

யுத்த வெறி ஒழிப்பு தீர்மானம்

அமெரிக்கா, துருக்கி, கிரீஸ் புதுத வெறியைக் கிளப்பி வருவதாகக் குற்றஞ் சாட்டி ரஷிய அரசியல் கமிட்டியில் கொண்டுவந்த தீர்மானம் தோல்வியுற்றது சமாதானத்தைக் குலைக்கும்படியான யுத்த வெறி பிரசாரதத்தை சகல நாடுகளும் தடுக்கவேண்டுமென்று ஆஸ்திரேலியா, கானடா, பிரான்ஸ் ஆகிய 3 நாடுகள் சேர்ந்து கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது.

சிறிய அசெம்பிளி

நிரந்தரமான சிறிய அசெம்பிளி புதிதாக அமைக்கப்பட்டால் அதன் அலுவலைக் கட்டுப்படுத்த ஆஸ்திரேலியா கொண்டுவந்த தீர்மானம் தோல்வியுற்றது. இத் தீர்மானத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் எதிர்த்தன. (ராய்ட்டர்)

பிரிட்டனில் கம்யூனிஸ்ட் நடவடிக்கை

விசாரணை செய்ய சர்க்கார் மறுப்பு

லண்டன், அக் 27

கம்யூனிஸ்ட் நடவடிக்கைகளைப்பற்றி ஆராய்ந்து விசாரணை செய்ய அமெரிக்கா ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருப்பது போல பிரிட்டனிலும் ஒரு பார்லிமெண்ட் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று இன்று காமன்ஸ் சபையில் கன்சர்வேடிவ் அங்கத்தினர் சர் ஸமிதர்ஸ கேட்டார். பிரிட்டனில் கம்யூனிஸ்டுகள் அதிகரித்துவருகிறார்கள் என்றும் அவர்களது கை வலுப்படுதற்கு முன் அவர்களை ஒடுக்க தான் ஒரு மசோதா கொண்டுவருவதாகவும் தெரிவித்தார். இந்த கோரிக்கையை ஏற்கமறுத்து திரு மாரிசன், அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாமென்றும் இவ்விஷயத்தை பிரிட்டனிலுள்ள அரசியல் கட்சிகள் கவனித்துக்கொள்ளுமென்றும் பதிலளித்தார். (ராய்ட்டர்)

அவதூறு வழக்கு

எம். பி. க்கு ரூ 1000 பிணை

கொழும்பு, அக் 29

நிதாஸ என்னும் சிங்களப் பத்திரிகையில் பிரதம மந்திரியையும் அவரது மந்திரி சபையையும் பற்றி அவதூறாக எழுதியதாக பாராளுமன்றத்து மொரடுவை அங்கத்தவரான திரு. சோமவீர சந்திரசிறீமீதும், டொன் சந்திரதாஸ கண்டகே மீதும் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் இரு எதிரிகளும் தலா ரூ 1000 பிணையில் விடப்பட்டனர் வழக்கு விசாரணை நவம்பர் 19 தேதிக்கு ஒதுக்கிவைக்கப்படடுள்ளது.

போலிஸ் காவலில் இருந்து தப்பிய பெண்

களுத்துறை தெற்கில் புரிந்த கபட நாடகம்

கொழும்பு, அக். 28

துக்ககரமான கதையைக்கூறி களுத்துறை தெற்கிலுள்ள ஒரு விதவையை ஏமாற்றி அந்தவீட்டிலே இரண்டுவாரகாலம் இருவர் (ஆணும் பெண்ணும்) தங்கியிருந்ததாகவும் அவ்வீட்டில் இருந்து பல பொருள்களை வீட்டிலுள்ளவர்கள் அறியாது அந்தப் பெண் திருடிச் சென்றுவிட்டதாகவும், பெண்ணின் பெயர் ஸ்ரீமதி புளோரன்ஸ் ஈகநாயகா என்று கூறியுள்ளதாகவும் அந்தப் பெண்ணுடன் வந்த இளைஞன் கிரேரோ என்னும் பெயர் உள்ளவன் என்று கூறப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவர்கள் இருவரும் வெளியேறிய தினத்தன்று இருவரும் சண்டை பிடித்துக் கொண்டதாகவும் கூறப்பட்டது.

சில நாட்களின் பின் களுத்துறை தெற்கிலுள்ள இந்த பெண் வீட்டாருக்கு பிரஸ்தாப புளோரன்ஸ் ஈகநாயகா என்னும் பெண்ணும் கிரேரோவும் பாணந்துறை போலிஸாரால் கைது செய்யப்பட்டதாக தகவல் கிடைத்ததாகவும் கூறப்படுகிறது பின்னர் இந்த புளோரன்ஸ் ஈகநாயகா என்னுப பெண் போலிஸ் காவலில் இருந்து தப்பிவிட்டதாகவும் இப்பொழுது போலிஸார் அப்பெண்ணைத் தேடி வருவதாகவும் தெரிகிறது

ஆஸ்திரேலியாவில் பறங்கியர் குடியேற்றம்

கொழும்பு, அக் 28

வெள்ளவத்தையில் பறங்கியர் குடியேற்ற சங்கத்தின் கூட்டம் திரு ஜி. எப். வாண்டர்ஹோவன் தலைமையில் நடைபெற்றது. ஆஸ்திரேலியாவில் குடியேற விரும்பும் பறங்கியர்கள் சங்கத்தில் அங்கத்தினராக சேரும்படி தலைவர் கூறினார் இச்சங்கத்தின் மூலம் ஏற்கனவே நான்கு பேர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேற சென்றுவிட்டார்கள். இன்னும் 46 பேர்கள் கப்பல் வசதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கத்தியால் குத்திக் கொலை

கொழும்பு அக் 28

சராவளி என்னுமிடத்திலுள்ள எஸ் சின்னப்பன் என்பவரை அதேபிடத்தைச் சேர்ந்த ஒருவர் கத்தியால் குத்திக் கொலை புரிந்துள்ளாரென்று கூறப்படுகிறது கத்தியால் குத்தப்பட்டவுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்ட சின்னப் பொடியன் ஆஸ்பத்திரியில் மரணமானதாகக் கூறப்படுகிறது. குத்தியதாகக் கூறப்படும் நபர் தலைமறைவாகத் திரிவதாகவும் போலிசார் புலன் விசாரணை நடத்துவதாகவும் கூறப்படுகிறது.

பணமும் நகையும் களவு

மட்டக்களப்பு, அக் 28

காத்தான் குடியிருப்பு வாசியான திரு எம் எம். முகமதலி மரைக்காருக்குச் சொந்தமான ரொக்கம் ரூ 4000மும் ரூ. 500 மதிப்புள்ள நகைகளும் களவு போயிப்பதாக போலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. போலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

கிரவுன் தியேட்டர் ஸகின்னர்ஸ் ரோடு

மருதானை

இன்று காண்பிக்கப்படுவது! புத்தம் புதிய படம்!!

தினசரி மாலை 6-15 இரவு 9-30

சனியும்-ஞாயிறும் மெட்னி 3 மணிக்கு

சுவர்ணலதா-நஸீர் திறபபட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும்

பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்

முன் இடம் தேடுங்கள்!

புத்தி விருத்திப் போட்டி இல. 1

ரொக்கப் பரிசு ரூபாய் 400-00

முதற் பரிசு ரூபாய் 300-00 2-ம் பரிசு ரூபாய் 75-00

போனஸ் பரிசு ரூபா 25-00

பிரவேசக் கட்டணம்:- முதல் 1 ரூபாவிற்கு 2 கூப்பன். அடுத்துவரும் ஒவ்வொரு ரூபாவிற்கும் 3 கூப்பன். ஒருவர் எததனை பரிசும் பெறலாம். அதிக கூப்பன் அனுப்பியோருக்கு போனஸ பரிசு ரூபா 25-00. கூப்பன்களை தனிகடிதத்திலும் தயாரித்து அனுப்பலாம். இலவசக் கூப்பன் வேணடுவோர் எமக்கு எழுதுக.

ஏஜென்ஸி கொமிஷன் 100க்கு 10 வீதம் கொடுக்கப்படும். ஏஜென்ஸி தேவையானோர் முன்னுடியே எழுதிக்கொள்ளவும். போட்டி ஆசிரியரின் விடையாழ்ப்பாணம் எக்ஸசேஞ் வங்கியில் The Exchange Bank of India & Africa Ltd.) டிப்பாசிட் செய்யப்பட்டிருக்கிறது. பிரவேசக் கட்டணம் அனுப்புவோர் "தி ஜயலங்கா ஸ்டோர்ஸ்" 5/8 ஸ்டான்லிரோட் யாழ்ப்பாணம்- ("The Jai Lanka Stores" 5/8, Stanley Road, Jaffna.) என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

குறிப்பு:- கூப்பன் நடுவில் இடப்பட்டிருக்கும் இலக்கங்களிலிருந்தே வலப்பக்கமாகவும், இடப்பக்கமாகவும் வாசிக்கவேண்டி இருப்பதை நேயர்கள் கவனிப்பார்களாக இப்போட்டியில் ஆசிரியரின் தீர்ப்பே ஆட்சேபமற்றதும் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தப்பட்டதுமாகும்.

முடிவு தேதி 20-11-47

ம்	ன	மா	1 வி	ரு	த்	தி
	ஸ்	ய	2	ல்	லி	
ம்	ட	ட்	3		வு	
		ய்	4	ண	மை	
தை	ந்		5	பே	ர	ன்
	ன்		6	ந்	தி	
னை	த		7	ன	ம்	
	வு		8 உ			

குறிப்புகள்—இடம்:

1. யுத்த காலத்தில் இது என்றால் யாருக்கும் அச்சந்தான்.
2. வாழ்க்கைக்கு இதன் உதவியும் மிக அவசியம்.
3. பெரிய.....உள்ள மாப்பிள்ளைக்கு சீதனம் அதிகமாகக் கிடைக்கும்.
4. ஏவற் சொல்.
5. இது இல்லாத குடும்பவாழ்வு ரசிக்காதுதான்.
6. நமது வாழ்வில் சம்பந்தப்படும் இவனைக் காண்பது அரிதிலும் அரிதாம்.
7. உயர்ந்த.....யாளரை நாடு பெற்றுகிறது.
8. யுத்த காலத்திலே சிலர் வேலையில் அதிகம் ஈடுபட்டனர்

குறிப்புகள்—வலம்:

1. நவீன மாதிரியான இப்போட்டி புத்தி.....யை உண்டாக்குவது நிசம்.
2. பூவின் உறுப்பினுளொன்று,
3. பொதுநலத்தோடு இது உடையவன் தியாகி ஆவான்.
4. இது அமையாத வாழ்வு புகழப்படமாட்டாது:
5. இவன் பெரும் செல்வனும்;
6. உலகுபுகழ் இந்தியப்பெரியார்
7. சேர்ந்தாரைக் கொல்லியெனப்படும்.
8. ஆகாயத்திலே காணப்படும்.

நேரில் கொண்டுவந்து தர விரும்புவோர் முடிவு தேதியன்று மாலை 6 மணிக்குள் பிரவேசக் கட்டணத்தையும், கூப்பன்களையும் நிலையத்தில் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளவும்.

விபரமாய் எழுதுக:

பெயர் .....

விலாசம் .....

.....

அனுப்பும் கூபபன் தொகை .....

மணி ஓடர்/போஸ்டல் ஓடர் நம்பர்.....

போட்டி நம்பர் 1 Agency.

திகதி ..... No. .....

THE JAI LANKA STORES,

5/8, STANLEY ROAD,

JAFFNA.

(Ceylon.)

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 29-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org